யாழ்ப்பாணம்

Registered as a NewsPaper பக்கங்கள் 08 விலை: ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 19 (01 - 05 - 1992) வெள்ளிக்கிழமை ஓசை: 73

## நிரந்தர நியமனத்திற்கு பரீட்சை விரைவில்

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் பரீட்சை நடைபெறவுள்ளது. இவர்களை நிரந்தரப்படுத்தும் பரீட்சை -1992 இற்கான பாடத்திட்டமும் மற்றும் ஏனைய விபரங்களும் அனைத்துப் பிரதேசக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் கல்விச் சேவைச் சபையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இந்தவிபரங்களை (8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் பாட்டாளி வர்க்கத்திற்கு தலைவர் பிரபாகரன் பாராட்டு

## தளரா உறுதிக்கு புகழாரம்

"தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்றது. போராட்டப்பழுவை ஒரு தோளிலும, பொருளாதாரப் பழுவை மறு தோளிலும் உறுதிதளராது சுமந்து ...ற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகின்றேன்" ...்வாறு தலைவர் பிரபாகரன் விடுத்த மேதினச் செய்தியில் தமிழீழ ...ட்டாளி வர்க்கத்தினருக்குப் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

...மதினம் குறித்து தலைவர் ...பாகரன் விடுத்த அறிக்கை ...று.

... அன்பிற்கும் மதிப்பிற் ... தமிழீழ மக்களே, ... தொழிலாளர் நாள். ...ட்டாளிகளின் எழு... உழைக்கும் மக்க... ...ப்பாட்டை வலி... ...ட்டி நாள்.

உழைக்கும் மக்களின் உழைப்பு சக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி. உழைப்பவனே பொருளுலகத்தைப் படைக்கிறான். மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான். உழைக்கும கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்.

இந்த உழைக்கும் மனிதர்களுக்கு நாம் இன்று விழா எடுக்கிறோம். ஒரு யுத்த சூழ்நிலையில், எதிரியின் படையெடுப்புகளுக்கு மத்தியில், பெரியதொரு பொருளாதாரச் சுமையின் அழுத்தங்களைத் தாங்கிநின்று நாம் பாட்டாளிகள் தினத்தைக் கொண்டாடுகிறோம்.



## உழைக்கும் கரங்களை துண்டிக்கும் முயற்சி

தமிழீழப் பாட்டாளி வர்க்கமானதுஎன்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்...றது. இனவாத அரசின் ஈவிரக்கமற்ற கொள்கையால் ...ழத்து வாழும் எமது மக்... ஒரு ஜீவமரணப் போராட்...தை எதிர்கொண்டு நிற்கி...கள். எமது மக்களின் ...ழக்கும் கரங்களைத் துண்...டு வெட்டு அவர்களின் ...ாந்த வாழ்க்கையை நரக...கிவிட எதிரியானவன் கங்...ம் கட்டி நிற்கிறான். எமது பாட்டாளி வர்க்கம் மீது மிகவும் கொடூரமான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டிருக்கிறது.

ஒரு மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வாழ்விற்கு மூலதாரமான உழைப்பு சக்தியை முடக்கிவிட்டால், அந்த மக்களின்மனவுறுதியை, ஆன்ம திட்டத்தை, போராட்ட உறுதியை உடைத்தெறிந்து விடலாம் என்பது சிங்கள ஆளும் வர்க்கத்தின் தந்திரோபாயம். இது எல்லாக் காலத்திலும், எல்லா சமூகங்களிலும், எல்லா அடக்கு முறையாளர்களாலும் கையாளப்படும் ஒரு ஒடுக்குமுறை யுக்தி, எமது எதிரியும் நீண்டகாலமாகவேஇந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறான். இதன் ஒட்டுமொத்த விளைவாகஉழைத்து வாழும் எமது மக்கள் சந்தித்த சோகம்நிறைந்தவரலாற்றைச் சொற்களால் விபரிக்க முடியாது.

## ...தந்திரத்தில் காதல்கொண்ட மக்களின் இலட்சியப் பற்று

...போராட்ட பழுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பழுவை மறு தோளிலுமாக, உறுதி தளராதுசுமந்து நிற்கும் தமிழ்ப்பாட்டாளிவர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்.

...யலாகச் சீண்டும் எதிரியின் ...க்கு முறை அழுத்தங்...ள எல்லாம் மலையாகத் ...ங்கிநிற்கும் எமது மக்களை ...ன் பாராட்டுகிறேன்.

...ாவுக்கும் அழிவுக்கும் அப்...ல், பசிக்கும் பஞ்சத்திற்கும் ...பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகிறேன்.

கல்லும், முள்ளும் ஏற்றமும் இறக்கமும் நிறைந்த, மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது. எதிரியானவன் இந்தப் பாதைவழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போடலாம். எமது பயணத்தில் சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம். எத்தனை தடைகள் ஏற்பட்ட போதும் எத்தனை துன்பங்கள் ஏற்பட்டபோதும், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ளவரை எமதுஇலட்சியப்பயணம்வெற்றியில்முடியும்என்பது நிச்சயம்

## ...இன ஒடுக்குமுறைக்கு எதிரான போரே முதன்மையானது

... விடுதலைப் போராட்...ல் பாட்டாளி வர்க்கத் ... பங்கு பிரதானமானது. ...ழப் பாட்டாளி வர்க்கமானது. ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கிறது. இந்த இருதலைப்பட்ச முரண்பாட்டில் இனவாத ஒடுக்குமுறையே பிரதான [8 ஆம் பக்கம் பார்க்க]

மன்னார் - வவுனியா பகுதியில்

## புலிகள் - இராணுவம் இரு முனைகளில் மோதல்

(மன்னார்)

மன்னார்மாவட்டம் உயிலங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் கடும்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இத்தாக்குதல்களால் இராணுவ தரப்பில் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டுள்ளது. (8 ஆம் பக்கம் பார்க்க)

மன்னார் இராணுவ நடவடிக்கை

## பத்தாயிரம் தமிழ் மக்கள் அகதி முகாம்களில் தஞ்சம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளினால் 30 இற்கு மேற்பட்டகிராமங்களிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வெளியேறி மடு அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர். (8ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு காவலரண்மீது புலிகள் திடீர்த் தாக்குதல்

ஆனையிறவு இராணுவ முகாமின் காவலரண் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக் காலை திடீர்த் தாக்குதல் ஒன்றை நடாத்தியுள்ளனர்.

இத் தாக்குதலால் காவலரண் பலத்த சேதமடைந்ததுடன் இராணுவத் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

## தச்சன்காட்டு காவலரண் புலிகளால் அழிப்பு

தச்சன்காட்டுச் சந்தியிலிருந்த சிறிலங்கா இராணுவக் காவலரண் ஒன்று விடுதலைப் புலிகளினால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகளால் இக் காவலரண் மீது அதிரடித் தாக்குதலொன்று நடாத்தப்பட்டது. முப்பது நிமிடநேரம் இடம்பெற்ற இத்தாக்குதலால் இராணுவத்தினர் இழப்புகளுடன் காவலரணை விட்டுத் தப்பியோடிவிட்டனர்.

தகர்க்கப்பட்ட காவலர [8 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு

நேற்று இடம்பெற்ற தச்சன் காட்டுச் சந்தி இராணுவ காவலரண்தகர்ப்பின்போது நான்கு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர். கப்டன் [8 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### நீமியா உரம்

நீமியா உரம் - இயற்கைப் பசளை. பயிருக்கு அடிக்கட்டுப் பசளையாகவும் பூச்சி, புழுக்களிலிருந்து பாதுகாப்பாகவும் உதவி விளைச்சலைப் பெருக்கிறது மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி/4350)

## சம்பள நிலுவை வழங்கப்படும்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம் அதன் ஊழியர்களுக்கு 01-01-92 இல் இருந்து வழங்க வேண்டிய 100ரூபா சம்பள அதிகரிப்பு இம்மாதம் நிலுவையுடன் வழங்கப்படவுள்ளதாக அதன் நெறியாளர்களில் ஒருவரான சு. தனபாலசிங்கம் தெரிவித்தார். (88)

## 3-ம் ஆண்டு வீர அஞ்சலி



மண் காக்கப் புறப்பட்டு விண்காக்கும் வீரவேங்கை

### கப்டன் மொறிஸ்

( தியாகராஜா பரதராஜன் )

பருத்தித்துறைப் பொறுப்பாளர்

தாய்மடியில்மலராய் - போர்மண்ணில்விதையாய்

12-09-1969 01-05-1989

இந்தியப் படையினர்க்குத்
துன்பியல் கற்பித்து
நம் தமிழ் ஈழத்தின்
வன்மை எடுத்துரைத்த நின்புயற் சாதனைகள்
மூன்றாண்டு முடிந்த பின்னும்
முதுமையடையவில்லை.

சிறிலங்கா இராணுவத்தின்
சிம்ம சொப்பனமாகி
தொண்டைமானாற்றினிலே
சொடர் புதை குழியமைத்தாய்,
டசீலனுடன் படை நடந்து
பூநகரியிலோர் கதைபடைத்தாய்.

பருத்திநகர்ப் பாசறைகள்
தரித்திருக்க முடியாமல்
சிதற வைத்தாய்! தலைவரின்
கருத்துக்கள் வழிநடந்து
களம் சமைத்தாய்;
மண்ணை, மக்களைக் காதலித்தாய்.

புதுப்புது இளைஞர்களைப்
புலிப் படையிலிணைத்தாய்,
மக்களின் மனம் புகுந்தாய்,
மாற்றானின் மார்புகளைத்
துளைத்தெறிந்தாய்;
எம் மண் நனைத்தாய்.

யாவரையும் புலியாக்கி
யாகப் பெருநெருப்பின்
வீரத்தடங்களிலே விரையவைத்தாய்;
இன்றும், கருத்தரிக்கும் கல்லறையுள்
படுத்திருந்தவாறே - நீ
போருக்கனுப்பும் வீரர்கள் கொஞ்சமல்ல.

உன் கொள்கை வழி நடக்கும்:
அம்மா, அப்பா, அண்ணன்மார்,
அக்காமார், தங்கை, அண்ணி
மருமக்கள், பெறாமக்கள்,
களத்தில் நிற்கும் தம்பி,

ஆத்தியடி,
பருத்தித்துறை.
2501

### விழுதுகள்

யாழ் புகையிரத நிலையப் பகுதியில் இருந்த இராணுவ முகாமில் இவன் சித்திரவதை செய்யப்பட்டான். உடலெங்கும் வரிவரியாகத் தழும்புகளை ஏற்படுத்தினர் இந்திய இராணுவத்தினர். மின்சாரம் பாய்ச்சினர். காலில் ஊசி ஏற்றினர். தலைகீழாகக் கட்டித் தூக்கினர். அதனால் இவனது கைகள் இயல்பாக இயங்காத சூழ்நிலையே ஏற்பட்டது. ஆனாலும் இவனது மனஉறுதி குலையவில்லை.

இந்தியப்படையை விட்டு ஓடச் சந்தர்ப்பம் பார்த்திருந்த தமிழ் இராணுவ வீரன் ஒருவனை இவன் இனங்கண்டான். அவனுடன் பேச்சுக் கொடுத்து தான் தப்புவதற்குரிய மார்க்கத்தை அமைத்துக் கொண்டான் ஒரு நாள் இரவு அந்த தமிழ் இராணுவ வீரனையும் கூட்டிக்கொண்டு அங்கிருந்து தப்பினான். அங்கிருந்தால் வேறு பலருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய ஒரு தேசத்துரோகியையும் வெளியில் கொண்டு வந்தான். தமிழ் இராணுவ வீரனது S. L. R இரு கைக் குண்டுகள் சகிதம் வந்த இவன் சில நாட்களின் பின் மீண்டும் தீவுப்பகுதிக்குச் சென்றான்.

8 குதிரைவலுக் கொண்ட இயந்திரம் இணைக்கப்பட்ட ஒரு மீன்பிடிப் படகில் இவனும் இவனது இரு நண்பர்களும் சென்று கொண்டிருக்கையில் வழியில கடற்படையினர் எதிர்ப்பட்டனர். இவர்கள் பதற்றப்படாமல் காத்திருந்தனர். அக்கடற்படைப் படகு இவர்களுக்கு மிக அருகே வந்த போது அவர்கள் மீது தாக்குதல் தொடுத்தனர். அச்சமயத்தில இவர்களது படகோட்டி கடலில் குதித்து விட்டார். எனவே இவர்களே படகையும் செலுத்த வேண்டும். சண்டையும் பிடிக்க வேண்டும் எனினும் சண்டை தொடர்ந்தது. படகில் வந்த நான்கு கடற்படையினரில் மூவர் இறந்து விட்டனர். ஒரேயொருவனே தப்பினான். இவர்களோ அதிசயமான முறையில் அனைவரும் தப்பினர். இன்பத்தின் மன பலமும், வழிகாட்டுதலுமே அன்றைய சண்டையில் வெற்றியை ஈட்டிக் கொடுத்தது.

அது போலவே இந்திய இராணுவத்தினர் இருக்கும் நயினாதீவில் அவர்களின் முகாமில் ஒட்டிக்கிடந்த தேசவிரோதிகள மீது இவன் தொடுத்த தாக்குதல்களும் அமைந்திருந்தன. வேலணை உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில்அமைந்திருந்தஇந்திய இராணுவ முகாமுடன் இருந்த தேசவிரோதிகளின் மீது இவனும் இவனது நண்பர்களும் தாக்குதல் தொடுத்தனர். ஒரு தேசத்துரோகி கொல்லப்பட்டான் அவனது பிஸ்டல் கைப்பற்றப்பட்டது. இரு தேசத்துரோகிகள் படுகாயமடைந்தனர் தமக்கு பாதகமான இயற்கைச் சூழலைக் கொண்ட இடத்தில நடத்தப்பட்ட இத்தாக்குதலின் போது தம்மை நோக்கி வந்த இந்தியப் படையினரை இன்பம் எதிர்கொண்டு நடத்திய தாக்குதல்கள் அவனது நண்பர்களால் மறக்கப்பட முடியாதவை.

புங்குடுதீவிலும் இந்தியப் படையினருடன் இணைந்துள்ள தேசத்துரோகிகள் மீது இவன் தாக்குதல் தொடுத்தான். எதிர்பார்த்ததை விட கூடுதலாக இந்தியப்படையினர் வந்திருந்த விடயம் இவர்களுக்கு பின்னாலிருந்து வேட்டொலிகள் கிளம்பிய போது தான் தெரிந்தது. எனினும் அச்சூழ்நிலையை சமாளிக்கும் ஆற்றல இவனுக்கு இருந்தது.

ஊர்காவற்றுறையில நடந்த முற்றுகைதான் இவனைப்பாதித்தது. தீவுப்பகுதியில் ஏழே ஏழுபேர் இருக்கையில் இருவரை இழப்பது மனத்தை பாதிக்கக்கூடியதுதானே. தேசவிரோதிகள் மீதான தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கையில் இம்முற்றுகை நிகழ்ந்தது.

இம்முற்றுகையில் 4 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் இவனிடம் பயிற்சி பெற்ற குட்டியும் கஜன் என்ற பேராளியும் இம்முற்றுகையில் வீரச்சாவெய்தினர்.

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களைப் பொறுத்தவரை இவன் என்றும் மறக்கப்பட முடியாதவன். இந்திய இராணுவமும், தேசத்துரோகிகளும் எங்கும் நிறைந்திருந்த போது அப்பகுதி வீடுகளில இவனை சுழற்சி முறையில் சாப்பிட்டுக் கொண்டு வருவான். ஆனாலும் தங்கள் வீட்டில் இவன் சாப்பிடாத நாட்கள் குறித்து அப்பகுதி மக்கள் உரிமையோடு கோபித்துக் கொள்ளுவர். இவன் பழகும் முறை இவனுக்காக எந்த நிலையையும் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை அளித்திருந்தது. அடிக்கடி இவனைச் சந்திக்கச்செல்லும் தாயின் மீதும் அவர்கள் பாசத்தைச் சொரிந்தனர்.

1989ஆம் ஆண்டுமார்ச்30-ம் திகதி ஊர்காவற்றுறையிலொரு வீட்டில் தாயும் மகனும் சந்தித்துக்கொண்டனர் இவன் இயக்கத்துக்கு போன நாட்களை நினைவுகூர்ந்தார் தாய்- இவன் 84ஆம் ஆண்டு மிகவும் சுகவீனமுற்ற நிலையில்தான இயக்கத்துக்கு சென்றான். எனவே இவனது தாயார் இவனுக்கு ஒரு கடிதம் எழுதினார் 'ஐந்தே ஐந்து நாள் மட்டும் என்னுடன தங்கியிரு. நான் உனக்கு விருப்பமான சாப்பாடெல்லாம் செய்து தருகிறேன். அதுக்குப் பிறகு நிச்சயமாக இயக்கத்துக்கு போக அனுமதிப்பேன்- நீ பயப்படாதே' என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இவன் திரும்பி வரவில்லை. அதைப் பற்றி அவர்கேட்டார்- இவன் அக்கடிதம் கிடைத்ததாகக் கூறினான்- அதுபற்றி தாய்க்கும் மகனுக்கும் இடையில் உரையாடல் தொடர்ந்தது. 'அப்ப நீ ஏன் வரயில்லை' - 'வந்தா நீங்கள் கட்டிப்போடுவீங்களே' ''நானா கட்டுவன் உன்னை இந்த மாதிரி மாத்தினது ஆரடா' - 'நீங்கள் தான்- நீங்கள் வீட்டில இன உணர்வோட கதைக்கிற கதைகளைப் பார்த்துத்தான் நான் இப்படி மாறினன்- இப்படியெல்லாம் நடப்பீங்கள் எண்டு தெரிஞ்சிருந்தா வந்திருப்பன்' 'சரி போனது போகட்டும்- போருக்கெண்டு போன பிள்ளை திரும்பி வருவான் எண்டு எதிர்பார்க்கயில்லை- ஆனா தம்பி நீ பின் வாங்கிச் செத்து போகாதை-

' பின்வாங்கிச் செத்துப் போகாதை'' என்று சொன்னது எப்போதும் அவனது நினைவில் இருந்தது. 20-4-89 அன்று சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற முற்றுகையில் காயமடைந்து சயனைட் உட்கொள்ளும் வரை அந்த வார்த்தை அவனை வழிநடத்திக்கொண்டிருந்தது.

அன்று தாய்க்கும் மகனுக்குமிடையில் நடந்த உரையாடலைக் கேட்ட அந்த வீட்டுப் பெண் கேட்டார் 'இவ்வளவு கதைக்கிறா, தப்பித்தவறி அப்படி ஏதும் நடந்தா அம்மா அழாமல் இருக்கப்போறாவோ?'

இன்று அடிப்படியில் இடக்கும் ஊர்தழலைப் பார்க்கும் போது இவனது நினைவுதான் வருகுறது அவருக்கு. ஊர்துகழலுடன் அவனைத் துரத்தித்திரிந்த காட்சிகள் நினைவுக்கு வருகின்றன. அவர் அழுகிறார்தான்-ஆனால் பெருமை கொள்கிறார்- 'என்ரை மகன் போராடித்தான் செத்தான்-''

## நினைவு கூருகின்றோம்...

## 01-05-1992

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் நாச்சிக்குடாப் பகுதியில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ம் லெப். சைமன்** (கபிரியேல் அந்தோனிப் பிள்ளை - தாமரைக்குளம் அடம்பன், மன்னார் )

1989 ஆம் ஆண்டு வவுனியாவில் இந்தியப் படையினரின் சிறை உடைப்பின்போது வீரச்சாவெய்திய -

**பெனா** (தில்லையம்பலம் திபாகரராசா-விடத்தல்தீவு, மன்னார்.)

இதே சம்பவத்தில் வீரச்சாவெய்திய நாட்டுப் பற்றாளர்களான -

**சிறீவையாபுரி செல்வம்** (இடதுகரை முத்தையன்கட்டு, முல்லைத்தீவு.)

**செல்வந்தன்** (செல்லப்பா பாலேந்திரன் - இராசேந்திரன்குளம், வவுனியா.)

**கந்தையா கணேசலிங்கம்** (அனந்தர் புளியங்குளம், வவுனியா.)

பருத்தித்துறை ஆத்தியடிப் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். ரம்போ** (தணிகாசலம் ஜெகேசன் - பத்திரகாளி ஒழுங்கை, பருத்தித்துறை.)

**வெள்ளை / சிறி** (வடிவேலு சிறிதரன் - வி எம். ஒழுங்கை, பருத்தித்துறை )

இதே மோதலின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -
(பருத்தித்துறைப் பொறுப்பாளர்)

**கப்டன் மொறிஸ்** (தியாகராஜன் பரதராஜன் - சுந்தரிவாசா, ஆத்தியடி, பருத்தித்துறை.)

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மகிழூர்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**பாலகுமார்** (குணரத்தினம் கிரிதரன் - பெரிய கல்லாறு, மட்டக்களப்பு.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி/4346)

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்




"இன்பம்" என்ற பெயரைச் சொன்னாலே அவனது ஆஜானுபாகுவான தோற்றம் தான் அனைவருக்கும் நினைவில் வரும். எவருமே அவனது உண்மையான வயதை மதிப்பிடமாட்டார்கள். அவனது பாடசாலை நாட்களில் அவனுக்கு 11 வயதாக இருக்கும் போது 14 வயதினருக்கான போட்டிகளிலும் 13 வயதாக இருக்கும் போது 18 வயதினருக்கான போட்டிகளிலும் கலந்து கொள்ளவும் அனுமதிக்கப்பட்டான். அவனது ஆசிரியர்களின் எதிர்பார்ப்புப் போலவே அவன் விளையாட்டுப் போட்டிகளில் தன்னை விட வயதில் கூடியோரை வெல்லும் ஆற்றலுடையவனாக இருந்தான். அந்த மனத் தைரியம் தான் அவன் போராட்டத்தில் இணைந்த பின்னர் எந்த சூழ் நிலைக்கும் துணிந்து முகம் கொடுக்கும் ஆற்றலை பெற்றுக் கொடுத்தது.

இதேவேளை இவனது உருவத்துக்கும் குணாம்சத்துக்கும் எந்த வித சம்பந்தமுமில்லாமல் இருந்தது. மிகவும் மென்மையானவன் இவன். குழந்தைகள் என்றால் அவனுக்கு உயிர் இளைஞனாக வந்த பின்னர் கூட எந்த விதமான கூச்சமுமின்றி இவர்களோடு ஓடிப்பிடித்து விளையாடுவான் 'அடுப்படியில நான் சமைச்சுக் கொண்டிருக்கேக்கை என்னோட கொழுவுவான் நான் துரத்திக் கொண்டு போய் அடுப்பு ஊதுற குழலால அடிப்பன். அந்த அடியை வாங்கிறதுக்கெண்டே கொழுவுவான். எப்ப வீட்டுக்கு வந்தாலும் என்னுடைய மடியில தலை வச்சுப் படுத்திட்டு போனா தான் நிம்மதி அவனுக்கு 89 சித்திரை 13ஆம் திகதி தான் அவன கடைசியாக வீட்டுக்கு வந்தது. வழக்கம் போல குழந்தைகளோட ஓடிப்பிடிச்சு விளையாட முடியல்லை அவனுக்கு. அந்தச் சுதந்திரத்தைப் பறிச்சிட்டான் இந்தியன் ஆமி அண்டைக்கு என்ரை மடியில படுத்திட்டுப் போன புள்ளைதான். அதுக்குப்பிறகு நான் அவனை உயிரோட காணயில்லை. அவன் கடைசிப் பிள்ளை எனக்கு ஒவ்வொரு பிள்ளையும் வர மூத்தது கள் மடியை விட்டுப்போகும் இவன் கடைசிப் பிள்ளையாய் இருந்ததால் கனகாலம் என்ரை மடியுக்குள்ளேயே இருந்தவன் அதனாலயோ என்னவோ மற்றப் பிள்ளைகளை விட இவன் என்னில கூடுதலான பாசமா இருந்தான்" என்று அவனைப்பற்றி நினைவு கூர்ந்தார் அவனது தாய்

வீட்டில் குழந்தையாக நடக்கும் இவன் போராளிகளைப் பொறுத்த வரை தாயாகவே விளங்கினான். யாழ்நகரம், தென்மராட்சி ஆகிய இடங்களில் அமைந்திருந்த பயிற்சி முகாம்களில் இவன் போராளிகளுக்கு பயிற்சி கொடுத்தான் பயிற்சி கொடுப்பது இலேசான விடயமல்ல ஒவ்வொரு வரும் ஒவ்வொரு சூழலில் இருந்து வந்தவர்கள் இவர்கள் எல்லோருக்கும் ஏற்ற மாதிரி நடந்து கொள்ள வேண்டும். எல்லோரது சிந்தனையையும் விடுதலைப் பாதையை நோக்கி கொண்டு செல்ல வேண்டும் பயிற்சியின் போது அவர்களை விட கூடிய நேரம் பயிற்சி கொடுப்பவர் செய்யவேண்டும் அப்படியாக இருந்தால் தான் பயிற்சி கொடுப்பவரைப் போல புதிய போராளிகள் உருவாகுவார்கள். எனவே பயிற்சி கொடுப்பதற்கென மிகவும் ஆற்றல் மிக்கவர்களே தெரிவு செய்யப்படுவர். அப்படியானவர்களில் ஒருவனாகவே இவன் மிளிர்ந்தான்.

போர்க்களங்கள் இவனது விளையாட்டு மைதானங்கள். அதிலும் கனரக ஆயுதங்கள் மூலம் எதிரியுடன் மோதுவது இவனுக்கு பிடித்தமானது இவனது உடல்வாகும் கனரக ஆயுதங்களைக் கையாள்வதற்கு ஏற்றது தான்.

19?7 ஆம் ஆண்டு யாழ்பண்ணையில் அமைந்திருந்த பொலிஸ் விடுதி இராணுவ முகாம் மீதான தாக்குதலின் முதன் முதல் முகாமுக்குள் சென்ற அணியினரில் இவனும் ஒருவன். முகாமுக்குள் செலவதற்கு முன்பே இவனுக்கு தலையில் காயமேற்பட்டது. ஆயினும் ஆயுதங்களை கைப்பற்றி பொலிசாரையும் இராணுவத்தினரையும் கைது செய்து கொண்டு போகும்வரை இவன் அங்கிருந்து செல்லவில்லை. காயத்திலிருந்து இரத்தம் வடியவடிய களத்திலேயே நின்றான். இதுபற்றி அறிந்துஇவனது அணித்தலைவன் இவனைக் கடிந்து கொண்டபோது "பெடியளுக்கு றெயினிங் குடு



லெப். இன்பம்

க்கிற நாங்களே இந்த மாதிரி காயங்களுக்காக வைத்தியம் செய்யப் போகக் கூடாது. இண்டைக்கு இதுக்கு நான் போயிருந்தா என்னட்டறெயினிங் எடுக்கிறவனும் அதைப் போலத்தான் பழகுவான். அதுக்காகத்தான் கடைசி வரை அங்கையே நிண்டனான் என்றான்.

இந்திய இராணுவத்துடன் போர் ஆரம்பமாகி அவர்கள் எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்த காலத்தில் இவனிடமும் இவனது நண்பனொருவனிடமும் சயனைட் இருக்கவில்லை. அந்த நண்பன் போர்களத்தில காயமுற்று சத்திரசிகிச்சைக்கு உட்பட்டவன்- அவனால் ஓட முடியாது ஒவ்வொரு நாளும் சாப்பாட்டிற்கு ஒழுங்கு செய்வதே பெரும் பிரச்சினை. எனவே இவன் தன் நண்பனிடம் நீ என்னோடயே இரு- நான் உன்னைத் தூக்கிக் கொண்டு ஓடுவன்- முடியாத கட்டத்தில் எங்கையாவது ஓடி ஒரு பத்தைக்குள்ள படு-நான் நிச்சயம் ஒரு ஆயுதத்தைப் பறிப்பன். அதால சண்டை பிடிச்சு உன்னைக் காப்பாத்துவன்" என்றான் அவ்வளவு தன்னம்பிக்கையிருந்தது இவனுக்கு.

இந்தியப்படையினருடனான போரில் காயமடைந்த சில போராளிகளை வைத்தியத்திற்காக தமிழகத்துக்குக் கொண்டு சென்ற போது அவர்களுக்கு பாதுகாப்பாகவும், உதவியாகவும் சென்றான் இவன். அவர்களை அங்கு நின்ற மருத்துவக் குழுவிடம் ஒப்படைத்து விட்டு வரும் போது இந்தியப்படை இந்த மண்ணை முற்றாகவே ஆக்கிரமித்திருந்தது. ஊர்காவற்றுறை பகுதியிலுள்ள மெலிஞ்சிமுனை என்ற இடத்தில் படகில் வந்திறங்கிய இவனும் இவனது நண்பர்களும் பற்றைகளுக்குள்ளேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. மிகுந்த சிரமத்தின் மத்தியில் அங்கிருந்த போராளிளுடன் தொடர்பு கொண்டு அங்கிருந்து புங்குடுதீவுக்குச் சென்றான். அங்கு வேறொருபோராளிக்காக நடந்த முற்றுகையில் சிக்கினான். சட்டையைக் கழற்றி விட்டு பொதுமகனாக நடித்ததை இந்தியப்படையினர் நம்பினர். எனினும் அவர்கள் வெளியேறும் சமயத்தில் சட்டைகுள்ளிருந்த சயனைட் தவறி வீழ்ந்ததால் இவன் இனம் காணப்பட்டு கைது செய்யப்பட்டான்.

(2 ஆம் பக்கம் பார்க்க

# மருத்துவம்

# சிறுநீரகத்தில் கற்கள் தோன்றுதல்

மாறன்

நாம் குடிக்கின்ற பதார்த்தங்கள் உண்ணுகின்ற உணவுகள் சமிபாடடைந்து உடலினுள் இரசயனத் தாக்கங்களுக்கு உள்ளாகும்போது கழிவுப் பொருள்களாக அமோனியா, யூரியா, மேலதிகமான கல்சியம் உப்பு என்பன உண்டாகின்றன. இவை பெரும்பாலும் சிறுநீருடனேயே வெளியேறுகின்றன.

ஒவ்வொரு மனிதனுக்கும் வலதுபுறமும் இடதுபுறமுமாக வயிற்றுப் பகுதியின் பின் பகுதியில் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. இவற்றிலிருந்து இரண்டு சிறுநீர்க்குழாய்கள் சிறுநீர்ப்பையை இணைக்கின்றன. சிறுநீரகத்தினால் உண்டாக்கப்படும் சிறுநீர் இப்பையினுள்ளேயேசேகரிக்கப்படும். அதாவது சராசரியாக ஒரு நிமிடத்திற்கு 1மில்லி லீற்றர் வீதம் சிறுநீர் உண்டாகும். பலூன் போன்ற சிறுநீர்ப் பையினுள் ஒரு குறிப்பிட்டளவு சிறுநீர் சேர்ந்ததும் நரம்புகள் மூலம் உணர்ச்சி தூண்டப்படும். உடனே ஆண் - ஆண்குறிமூலமும்பெண்-பெண் குறிமூலமும் சிறுநீரை வெளியேற்றுகின்றனர்

## சிறுநீரகத்தில் கற்கள் எவ்வாறு உண்டாகின்றன?

முன்பு கூறியதுபோல் கழிவுப்பொருள்களாக வரும் கல்சியம் உப்பு, யூரியா போன்றவற்றை வெளியேற்ற போதியளவு நீர் வேண்டும். இந்த நீர் நாம் அன்றாடம் உட்கொள்கின்ற குடி தண்ணீர், தேநீர், இளநீர் மற்றும் குளிர் பானங்கள் அத்துடன் உணவுடனும் சிறிதளவு நீர் உட்செல்கிறது. இரசாயனத்தாக்கங்கள் மூலமும் உடலில் ஓரளவுநீர் உண்டாக்கப்படுகிறது. அதேநேரம். வியர்வை, சுவாசம், மலம் போன்றவற்றினால் உடலிலிருந்து நீரிழப்பு ஏற்படுகிறது. ஆனாலும் சிறுநீர் மூலமே பெருமளவு நீர் வெளியேறுகிறது. சராசரியாக 1-1 1/2லீற்றர் சிறுநீர் வயது வந்தவர்களில் நாளொன்றுக்கு வெளியேறுகிறது- இத்துடன் தான் கழிவுப் பொருள்களாக வரும் யூரியா, கல்சியம் போன்றவை வெளியேற்றப்படுகின்றன- 400 மில்லி லீற்றருக்குக் குறைவாக சிறுநீர் உண்டாகுமாயின் சிறுநீரகங்கள் நிரந்தரமாக பழுதடைந்துவிடும்-

## சிறுநீரகங்களில் கற்கள் தோன்றுவதற்குரிய காரணிகள்

பல காரணிகள் இருந்த போதிலும், போதியளவு நீர் உட்கொள்ளாமை ஓர் முக்கியமான காரணமாகும். அதுவும் குறிப்பாக இட்போது நிலவும் வரட்சியான வெட்கை கூடிய நாட்களில் வியர்வையாக பெருமளவில் நீர் உடலிலிருந்து வெளியேறுகிறது. இதனால் சிறுநீரின் அளவு குறைந்து அதன் செறிவு அதிகரிக்கிறது. இப்படியான சூழ்நிலைகளிலேயேகல்சியம் உப்பு சிறுநீரகத்திலும் சிறுநீர் குழாய் சுவர்களிலும் படிகின்றது-

இதுவே படிப்படியாக வளர்ந்து சிறு கற்களாக உருப்பெறுகின்றன. ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கற்கள் வளர்ந்ததும் அவை மிகச்சிறிய விட்டமுடைய சிறுநீர் குழாய்களினூடாக செல்லமுடியாமல் தடை ஏற்படும். இதன் போதே வயிற்றுப்புறப் பகுதியில் கடுமையான வலி ஏற்படும் அத்துடன் வாந்தியும், சில வேளைகளில் சிறுநீருடன் இரத்தமும் வெளியேறும். சிறுநீரகத்தில் உண்டாகும் கற்கள் கரடுமுரடாக இருந்தால் அவை சிறுநீரகத்தையும் சிறுநீர்க்குழாய்களின் சுவர்களையும் காயப்படுத்துவதாலும். சிறுநீருடன் இரத்தப் பெருக்கு ஏற்படும். கிருமிகளும் பெருகும். இந்நிலை தொடருமாயின் அடிக்கடி வலியும், காய்ச்சலும், உயர் இரத்த அழுத்த வியாதியும் இறுதியில் சிறுநீரகம் முற்றாக தொழிற்படமுடியாத நிலையும் ஏற்படும்.

'கல்சியம் உப்பு' உடல் வளர்ச்சிக்கும் எலும்புகளின் வளர்ச்சிக்கும் மிக அவசியமான தொன்றாகும். ஆனாலும். கல்சியம் உப்பு செறிவாகவுள்ள பால், பாலுடன் சம்பந்தப்பட்ட உணவுப் பொருட்களான தயிர், மோர், சீஸ் மற்றும் கீரைவகைகள் உண்பவர்கள் போதியளவு நீரை குடிக்க வேண்டும். அதுவும் இப்படியான வரட்சிக் காலங்களில் மேலதிகமாகநீர் குடிக்கவேண்டும். இப்பகுதியிலுள்ள கிணற்று நீரிலும் கல்சியம் உப்பு செறிந்து காணப்படுவதால் தண்ணீரை குடிப்பதற்கு முன்னர் நன்கு கொதிக்க வைத்து ஆறிய பின்னர் கீழே அடையும் கல்சியம் உப்பை மீண்டும் கலக்காமல் சுத்தமான துணி மூலம் வடித்து உட்கொள்ள வேண்டும்.

மேலும், 'சொக்கலேற்' 'தக்காளி' புளிப்பான உணவுப் பொருட்களிலுள்ள ஒருவகை 'ஒக்ஸலேற' என்கிற பொருளின் செறிவு அதிகமாக இருப்பதாலும்இவையும்'ஒக்ஸலேற் கற்கள் என்கிற வகைக் கற்களையும் அல்லது கல்சியம் உப்புடன் சேர்ந்து கல்சியம் ஒக்ஸலேற் என்கிற உப்பையும் தோற்றுவிக்கிறது. எனவே இவைகளுடன்)அடிக்கடிகொதித்து ஆறியநீர், இளநீர், எலுமிச்சைப்பழநீர் என குடிக்க வேண்டும். ஆண்குறி, பெண்குறி. சிறுநீர் குழாய்கள் என்பவற்றில் வியாதிகள், கிருமிகள் படிவதாலும் இவை நாளடைவில் கற்கள உருவாவதற்கு வழிவகுக்கும். மேலும் கற்கள் உருப்பெற்றதும் சிறுநீரில் வரும் கிருமிகள் படிந்து சிறுநீரகத்தைப் பாதிக்கும்.

## ஆபத்துகள்

சிறுநீரகம், சிறுநீர்க்குழாய்கள், சிறுநீர்ப்பை என்பவற்றில் கற்கள் படிய ஆரம்பித்தால் அடிக்கடி கடுமையான வலி ஏற்படும். சிறுநீருடன் இரத்தப் பெருக்கும் ஏற்படும். சிறுநீர் கடும் சிவப்பாக வெளியேறும். சிறுநீர்க் குழாய்களில் கிருமிகள் படிவதனால் அடிக்கடி காய்ச்சல். வாந்தி ஏற்படும். அதனைத் தொடர்ந்து உயர் இரத்த அழுத்த வியாதியும் ஏற்படும். இறுதியில் சிறுநீரகம் முற்றாகத் தன் தொழிற்பாட்டையும் இழக்கும். இதனால் மரணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் உடலில் ஏற்படும் கழிவுப் பொருட்களை அகற்றுவதால் சிறுநீரகம் உயிர்வாழ்க்கைக்கு மிக முக்கியமான உறுப்புகளில் ஒன்றாகும்.

## தடுப்பதற்கு சில முறைகளும் சிகிச்சையும்

அடிக்கடி, அதுவும் இப்படியான வரட்சிக் காலங்களில் தோட்டங்களிலும், வெயிலிலும் அதிகளவு வியர்வை சிந்த உடலுழைப்புச் செய்பவர்கள் வெயிலில் நீண்ட தூரம் சைக்கிள் ஓடுபவர்கள். கூலிவேலை செய்பவர்கள் கொதிக்க வைத்து ஆறிய நீரை நிறையக் குடிக்க வேண்டும். ஏறக்குறைய 10 – 12 போத்தல் நீர் குடிக்க வேண்டும் நாளொன்றுக்கு. மேலும் இளநீர். எலுமிச்சைப் பழச் சாறு என்பனவும் குடிக்கலாம்.

## சிகிச்சை

கற்கள் உருப்பெற்று விட்டால், அதுவும் அடிக்கடி தாங்க முடியாத வலியும், சிறுநீருடன் இரத்தப் பெருக்கும், கிருமிகள் படிந்து காய்ச்சலும் அடிக்கடி ஏற்படுமாயின் சத்திர சிகிச்சைதான் ஒரே வழி. ஒருமுறை கற்கள் உண்டாகினவருக்கு மீண்டும் மீண்டும் ஏற்படலாம். எனவே இவ்வாறான சிக்கலான வியாதிகள் உண்டாகு முன்னர், ஒவ்வொரு நாளும் அடிக்கடி போதியளவு நீர் உட்கொண்டு சிறுநீரகங்களில் கற்கள் உண்டாகுவதைத் தடுப்போம். சிறுநீரகங்களில் கற்கள் தோன்ற நீண்ட காலங்கள் ஏற்படுவதால் போதியளவு நீர் உட்கொள்வதால் ஓரளவு இவ்வாபத்தைக் குறைக்கலாம்.

# மேதினம் விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் நாள்

மே தினம் - அனைத்துலக தொழிலாளர்களுக்குரிய ஒரு திருநாளாக பிரகடனப்படுத தப்பட்டுள்ளது

அமெரிக்காவின் தொழிற் பேட்டைகளை 1886 மே ஒன்றில் அண்டி எட்டு மணி நேர வேலைக்கான போராட்டம் தொடங்கப்பட்டு 1889 இல் வெற்றி பெற்றது தொழிலாளர்களுக்கான எட்டு மணி நேர வேலையை நிலைநாட்ட உலகளாவிய அளவில் இயக்கம் நடத்துவது என்றும், உலகத் தொழிலாளர் களின் எழுச்சி நாளாக மே முதலாம் திகதியை ஆண்டு தோறும் உலகெங்கும் கொண்டாட வேண்டுமென்றும் 1889 இல் இரண்டாவது அகிலம் முடிவெடுத்தது. அதன் அடிப்படையில் 1890-ம் ஆண்டு மே முதலாம் திகதியிலிருந்து ஒவ்வொரு மே முதல் நாளும் உலகளாவிய அளவில் தொழிலாளர் எழுச்சி நாளாக உலகத் தொழிலாளர்கள் ஒற்றுமை நாளாக கொண்டாடப் படுகிறது.

ஆனால் இது பின்னர் மே தினம் என்பது தனிய ஆலைத் தொழிலாளர்கள் தொழிற் சங்கங்கள் மூலம் நடத்தும் விழா என்றும் வேலை நிறுத்தம் சம்பள உயர்வு போனஸ், ஒய்வூதியம் என்பன பற்றி மட்டுந்தான் மே நாளில் குரலெழுப்பலாம் என்று கருதப்பட்டது.

உண்மையில் மே தினம் என்பது உலகம் முழுவதும் முள்ள தொழிலாளர்களின் மகத்தான திருவிழா தொழிலாளர் வர்க்கத்தின் சுதந்திர விடுதலை உணர்வுகளுக்கு வித்திட்ட நாள்.

தமது வர்க்க உரிமைகளை நிலைநாட்ட, அடிமை விலங்கொடிக்க தொழிலாளர்கள் தமது உயிரையும இழக்கத் தயாரான உணர்ச்சி மிகு திருநாள்.

சுரண்டல்களுக்கும் கொடுங்கோன்மைகளுக்கும் எதிராக தமது முன்னேற்றத்திற்கும் மகிழ்ச்சிக்குமான போராட்டத்திற்கு உலகத் தொழிலாளர்கள் அணிதிரண்ட நாள்.

எனவே தொழிலாளர் எழுச்சியை விடுதலை உணர்வை வெளிப்படுத்தும் நாளாக மே நாளை நாம் கொண்டாட வேண்டும்

''தொழிற் சங்கங்கள் ஆலை நிர்வாகத்தை எதிர்த்த உடனடிப் போராட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தினால் போதாது. அவை தொழிலாளர் வர்க்கத்தின் பொதுவான அரசியல் சமுதாய இயக்கங்களில் இருந்து விலகி நிற்கக் கூடாது என்றார் மாமேதை லெனின்.

இலங்கைத்தீவிலும் கடந்த நூற்றாண்டிலிருந்தே தொழிலாளர் நடவடிக்கைகள் வேலை நிறுத்தங்கள் நடைபெற்று வருகின்றன. 1919 இல் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களைத் தலைவராகவும் மலையகத் தமிழர் தலைவர் பெரிசுந்தரம் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு இலங்கைத் தொழிலாளர் நலச்சங்கம் அமைப்பு உருவானது

ஆரம்பத்தில் அந்த அமைப்பில் பணியாற்றிய ஏ. ஈ. குணசிங்கா என்ற சிங்களத் தலைவர் சர்வசனவாக்குரிமையையும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமையையும் முழுமையாக ஆதரித்து வந்தார் ஆனால் அவர் அரசியல் கட்சி ஒன்றைதொடங்கியதன் பின்பு வர்க்க நலனைவிட இனநலனைப் பற்றியே அக்கறை கொண்டார். வர்க்க நலன்களை இனவாதத்திற்குப் பலி கொடுத்து இன வெறியைக் கிளப்பினார்.

இதே போன்றே அரசாங்க பணியாளர் சங்கங்களில் அன்று சிறப்புற்று விளங்கிய அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் பல ஆயிரக்கணக்கான தமிழ் உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும் சங்க வளர்ச்சிக்கு பல தமிழ் உறுப்பினர்கள் பெரும் சேவையாற்றியிருந்த போதிலும் தமிழர்களை புறக்கணித்து இனவாதத்தைக் கக்கியது இந்தவகையில் உழைத்து பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி தன் உயிரைத் தியாகம் செய்த கந்தசாமி போன்ற தமிழர்களின் சேவைகள் புறக்கணிக்கப்பட்டன கணக்கிலெடுக்கப்படவில்லை.

''உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்'' தொழிலாளர் வர்க்கமே ஒன்றுபடு என முழங்கியபடி மேதின அணி வகுப்புக்களையும் ஊர்வலங்களையும் நடத்தி வந்த இடது சாரிகள் 1965 க்குப் பின் தோசை மசால வடை தலத்தெல் (நல்லெண்ணெய்) அப்பிட்ட எப்பா எங்களுக்கு வேண்டாம்'' என்று தமிழ் மக்களைப் புறக்கணித்து தமிழ் மக்களுக்கு எதிராக இன வெறிக் கூச்சலை எழுப்பினர்.

இவ்வாறாக ஆரம்பகாலத்திலிருந்து தொழிற்சங்கப்பணியாற்றிய தமிழர்கள் அவமதிக்கப்பட்டு தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டு தமிழர்கள் தொழிற்சங்கங்கள் அமைப்பதற்குக் கூட தடைகள் போடப்பட்டு மலையகத் தமிழர்களின் குடியுரிமை வாக்குரிமைகளும் பறிக்கப்பட்டு இலங்கைத் தீவில் தமிழர்களுக்கு எதிரான இனவெறி உச்சக்கட்டத்தை அடைந்தது வர்க்கமுரண்பாடுகளுக்கு மேலாக இனமுரண்பாடுகள் தலையெடுத்துள்ளன

தமிழ் மக்கள் வர்க்க உணர்வோடு செயற்பட்டு தொழிலாளர் வர்க்கத்துக்காக பல்வேறு இழப்புக்களைச் சந்தித்த போதிலும் தியாகங்களைப் புரிந்த போதிலும் முற்றியுள்ள இனமுரண்பாடுகளினால் தொழிலாளர் வர்க்கம் எண்ணிப்பார்க்க முடியாத நிலை ஏற்பட்டு விட்டது.

தற்போதைய சூழ்நிலையில் தமிழீழப்பகுதி தொழிலாளர்களின் போராட்ட இலக்கும் வேறுபட்டதாக ஆகிவிட்டது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு, சலுகைகள், வசதிகள் கேட்டுப் போராடும் நிலை அன்றி, தாம் செய்து வந்த தொழிலையே இழந்துவிட்ட நிலையில் தொழிலுக்காக அவதியுறும்நிலைஏற்பட்டுவிட்டது

கட்டடத்தொழிலுக்கு வேண்டிய சீமெந்து இரும்புக்கம்பி, மணல் போன்ற மூலப்பொருள்களின்மையால் கட்டடத் தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

ஆலைக்கு வேண்டிய எரி பொருள்கள், மின்சாரம் மற்றும் மூலப்பொருள்களின்மையால்ஆலைத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

விவசாயத்திற்கு வேண்டிய விதை பொருள், உரம், கிருமி நாசினி, எரிபொருள்களின்மையால் விவசாயத்தொழிலாளர்கள் வேலையிழந்து அவதியுறுகிறார்கள்.

மீன்பிடிக்கச் செல்ல எரி பொருளின்மையாலும், இராணுவத்தாக்குதலினின்றும் பாதுகாப்பின்மையாலும்மீன்பிடித்தொழிலுக்குச் செல்ல முடியாமல் கடற்தொழிலாளர்கள் அவதியுறுகிறார்கள்.

இவ்வாறு தமிழீழத்திலுள்ள அனைத்துத் தொழிலாளர்களும் தமது தொழிலை இழந்து இன்று பட்டினிச் சாவை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

தமிழீழத் தொழிலாளர்களில் பெரும்பாலானோர் இன்று தொழிலுரிமைகள் அரசியல் உரிமைகள் உட்பட எந்த உரிமைகளும் அற்ற நிலையில் உயிர் வாழ்வதற்கே உத்தரவாத மற்ற நிலையில் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொருளாதாரத் தடையினால் வசதி படைத்தவர்களும் தொல்லைகளுக்காளாகின்றார்கள்.

இலங்கைத் தீவில் வர்க்க முரண்பாடுகளை விட இனமுரண்பாடுகள் முற்றிவிட்டன. சிங்கள பாட்டாளிகளை விட தமிழீழத்தில் முதலாளிகள், பணக்காரர்கள் கூட இன்று பெரும் சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் ஆளாகி வருகிறார்கள். தொழிலே இல்லாது தமிழீழத் தொழிலாளர்கள் அவதியுறுகின்றனர். இன்று இங்கு மலைபோல வளர்ந்துள்ள சிக்கல் தேசிய இனச் சிக்கலே தமிழீழ மக்கள் தேசிய விடுதலையை நிலைநாட்டுவதன் மூலமே தம்மீது திணிக்கப்பட்டுள்ள அனைத்து அடக்கு முறைகளை உடைத்தெறிந்து உரிமை பெற்ற இனமாக பெருமையுடன் வாழமுடியும்.

எனவே தமிழீழ மக்களின் இவ்வாண்டு மே நாள் முழக்கமும் சூளுரையும் தமிழீழ விடுதலை நோக்கியதாகவே அமைய வேண்டும். மே நாள் கொண்டாட்டங்கள் அனைத்து மக்களின் சுதந்திரத்திற்காகவும் முதலாளித்துவ அடிமைத் தளையிலிருந்தும் விடுவிப்பதற்காகவும் அமையட்டும்.

''உழைக்கும் வர்க்கம் ஒன்றுபட்டு உரிமைக்குரல் ஓங்கி ஒலிக்கட்டும்''

## சூழல் மாசடைவதால் மூளையில்லாக் குழந்தைகள்

மருத்துவ உலகில் சாதனை படைக்கும் இக்காலகட்டத்தில் வேதனைக்குரிய சம்பவங்களும் நிகழ்வதுண்டு. அமெரிக்காவில் டெக்ஸஸ் மாநிலத்திற்கருகாமையில் கடந்த ஒரு வருட காலத்தில் 17 குழந்தைகள் மூளையின்றிப் பிறந்துள்ளன.

இவர்களில் ஒருகுழந்தைக்கு மூளையில் நுண்ணிய துவாரம் ஏற்பட்டுள்ளது. இன்னொரு குழந்தை ''ஸ்பினா பிபீடா'' எனும் மூளை நோயுடன் பிறந்துள்ளது. இந்நோயுடன் எவருமே உலகில் வாழ்ந்ததில்லை. இக்குழந்தையின் பிறப்பு மருத்துவ உலகில் நம்பமுடியாத சம்பவமாகவும் இருக்கின்றது.

டெக்ஸஸ் மாநிலத்தில் சௌக்கிய பிரிவுத் திணைக்களமும் அட்லாண்டா நோய் தடுபபுநிறுவனமும் இணைந்து இந்தக் குழந்தைகளின் நிலையைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகின்றன.

முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா நிறுவனங்களைச் சேர்ந்த மெக்ஸிகோவில் உள்ள ''றியோ கிராண்ட்'' போன்ற தொழிற்சாலைகளில் இருந்து வெளிவரும் புகை, இரசாயன கழிவுகள் சூழலை மாசடையச் செய்வதினால் இத்தகைய தாக்கம் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் இத் தொழிற்சாலைகள் சூழலை மாசடையச் செய்வதாக புகார் செய்யப்பட்டு தடை செய்யப் பட்டிருந்தது. அப்பகுதியில்குறைந்த கூலிக்கு ஆட்களை அமர்த்துவது இலகுவாக அமைந்தது.

தொழிற்சாலைகளை அடுத்துள்ள மாற்றாமோறோஸ் பகுதியிலுள்ள இன்னுமொருவைத்தியசாலையில் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 1990 ஆம் ஆண்டு காலகட்டத்தில் பிறந்த 8709 குழந்தைகளுள் 42குழந்தைகள் நரம்புத் தொகுதியில் தாக்கத்துடன் பிறந்துள்ளன. 28 குழந்தைகள் மூளைக்கோளாறுகளுடன் பிறந்துள்ளன.

டெக்ஸஸ் மாநிலத்தின் சௌக்கிய பிரிவு ஆய்வுகளில் இருந்து அங்குவாழும் ஆண்கள் தாம் தந்தையர் ஆவதற்கு அஞ்சுவதாகவும் குழந்தைகள் தமக்கு இருக்க வேண்டும் என விரும்பினாலும் கூட அங்க வீனக் குறைவான குழந்தைகளையே பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கும் எனவும் தெரியவருகிறது.


## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 17-9 81



உதிர்வு: 1-4-92

செல்வி துஷாந்தி பஞ்சாட்சரலிங்கம்
(6 ஆம் ஆண்டு மாணவி)
(முன்னாள் யாழ்/நல்லூர் சென்றபெனடிக்ற் பாடசாலை)
(யாழ். இ. ம. கல்லூரி)

கட்டி அணைத்து நீ முத்தம் கொடுத்ததும்
கவலை மறந்து நாம் உள்ளம் குளிர்ந்ததும்
சுட்டிச் செயல்கள் செய்து காட்ட - நாம்
சூழ இருந்து சிரித்து களித்ததும்!
சிட்டுக் குருவியென சிறகை விரித்து நீ
சிங்கார நடனம் செய்து காட்டவும்
பட்டுச் சட்டையும் பொட்டிட்ட முகமும்
கொட்டும் சிரிப்பும் கொள்ளையிடும் பேச்சுடனே
துள்ளிச் சென்று நீ பள்ளி செல்லுகையில்
''போயிற்று வாரேன் அம்மா என்பதும்
எண்ணமுடியுதில்லை நெஞ்சில் இரத்தம் பாயுதடி
அள்ளி உனக்கொரு கொள்ளியிட்டோம் ஆனால்
— அம்மா
இட்ட கொள்ளியில் நித்தம் எம்மை எரிக்கின்றோம்!

ஆ. பஞ்சாட்சரலிங்கம்,
(கமலேஸ்வரிஸ்ரோர்ஸ்)
49, மூர்த்த வினாயகர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

அம்மா, அப்பா
கிரிஷாந்தினி
கோபிரமணன்
கோபிராஜ்

(சி- 4352)


### வாசக நேயர்களே!

எமது ஈழநாதம் வெள்ளிமஞ்சரிக்கு வாசகர்களிடம் இருந்து தரமான சிறுகதை ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம். பிரசுரிக்கப் படும் ஆக்கங்களுக்கு முந்நூறு ரூபாய் சன்மானம் வழங்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

- ஆசிரியர்


### எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி !

இப்பொழுது எங்கள் ஸ்தாபனத்தில் சகல வகையான ஐஸ்கிறீம் மற்றும் குளிர்பானங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

ராஜா கிறீம் ஹவுஸ்
இல 36, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(2508)

யாழ்ப்பாணம்



# சத்ய ஜித்ரே... சில குறிப்புகள்

அன்புள்ள ஐயா!

இந்தியாவின் சினிமா மாணவர்கள் உங்களை மதிப்பதன் மூலம் மேன்மை அடைகிறார்கள். விமர்சிப்பதன் மூலம் வித்தியாசப் படுகிறார்கள். ஆக நல்ல சினிமா சம்பாஷணைகளில் அறிவு நிலையினை விலாசம் சொல்லும் கருவியாக நீங்கள் பயன்படுகிறீர்கள். நானும் அவ் வழி வந்தவனே. ரேயை தெரியாது என்று சொன்னால் கேவலம் என்பதனால் வதந்திகளை விபரமாய்ச் சொல்லி உங்களைத் தெரிந்தது போல் நடித்திருக்கிறேன். சினிமா தெரிந்தவர்களுடன சம்பாஷணையில் ஈடுபடும் ஆர்வத்தில் சொன்ன பொய்யைப் பலப்படுத்த உங்கள் படங்களின் பெயர்களை மட்டும் மனப்பாடம் செய்து வைத்திருந்தேன். பின் உங்களின் படங்களைப் பார்க்காமலே உங்கள் விமர்சகன் ஆனேன். வித்தியாசப் படுவதற்காக பின் சினிமாவை கையாள முயன்று திக்கு முக்காடிப் போன நேரத்தில், அவசரமில்லாமல் எமது வாய் நகரும் உங்கள் சினிமாவைப் பார்த்தேன். அன்று முதல் ரேயைப் பற்றி அதிகம் பேசுவதில்லை. நான் கேட்க மட்டுமே செய்தேன். பொறாமையில் வந்த பொறுமை அது.

அன்பன்
கமலஹாசன்

இது திரைப்பட டைரக்டர் சத்ய ஜித்ரே மறைவதற்கு முன்பாக இந்தியாவின் முன்னணி நடிகர்களில் ஒருவரும், சினிமா பற்றிய பிரக்ஞையுடன் கூடிய தேடல் உள்ளவருமான கமலஹாசன் ரேய்யிற்கு எழுதிய பகிரங்க கடிதம் ஆகும்.

★ ★

மனித குலம் அனைத்துக்கும் பொதுவான அம்சங்களாக இருக்கும் பிறப்பு, இறப்பு, சச்சரவுகள், நட்புறவு, உரையாடல்கள், காதல் சகிப்புத்தன்மையின்மை, மற்றும் இரக்கம் காட்டுதல் முதலிய அடிப்படையான சூழல்களையும், கருத்துக்களையும். சத்ய ஜித்ரே புதுப்பித்தார். கண்ணுக்கும், செவிக்கும், அதன் மூலம் மூளைக்கும், இதயத்திற்கும் அவற்றைத் தமது கலாசார மரபு என்னும் பெட்டகத்தின் மூலம் அனுப்பி தமது ஆளுமையின் வாயிலாக அவற்றை பன்மடங்காக்கினார்.

இது சத்ய ஜித்ரே பற்றி சோவியத் யூனியனின் இயக்குனர்களில் ஒருவரான தெளலத் குதோசைரோவ் கூறியதாகும்.

சத்ய ஜித்ரேயின் படங்கள் தான் சினிமாவைப் பற்றிய எனது பொதுவான கருத்துக்களையே மாற்றின என்கிறார் ஜப்பானின் புகழ் பெற்ற இயக்குனர் அகிரா குரோசொவா.

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தைச் சேர்ந்த சத்ய ஜித்ரே என்னும் திரைப்பட மேதை உலகம் முழுவதும் அறியப்பட்டவர்.

பிரான்ஸ் அதிபர் மித்ரண்ட் இந்தியா சென்றிருந்த சமயம் ரேயை நேரில் சென்று சந்திப்பதற்காக தனது நேரத்தில் ஒரு பகுதியைச் செலவிட்டார் என்பதும், 1991-ல் ரேயின் சினிமா சேவையைப்பாராட்டி ஒஸ்கார் கமிட்டி அவருக்கு வழங்கிய சிறப்பு விருதினை ரே நோய்வாய்ப்பட்டிருந்த நிலையிலும் வைத்தியசாலை வரை தேடிச்சென்று வழங்கிக் கௌரவித்தமையும் அவரது மேதைமையை உணர்த்துவதாகும். பிரான்ஸ் நாடு வழங்கும் அதி உயர் விருதான 'லெஜன் டிஹெனர்' என்னும் விருதையும் சத்யஜித்ரே பெற்றுக் கொண்டவர்.

★ ★

வியாபார நோக்கத்திற்காக திரைப்படங்களை இயக்காமல சமுதாய உணர்வு கொண்ட படங்களைத் தயாரித்து இயக்கி திரைப்பட உலகில் மட்டுமல்ல, மக்கள் மத்தியிலும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை சத்யஜித் ரேயை சாரும்.

தனக்கென்றொரு தனிப்பட்ட சுதந்திரம் வேண்டும் என்ற அசைக்க முடியாத கொள்கையை உடையவர் ரே திரைக்கதை வசனம் என்று தொடங்கி உடை அலங்காரம், கலை, ஒலிப்பதிவு, இசை, படத்தொகுப்பு என்று அத்தனையையும் அவரே கவனித்து உருவாக்குவார்.

1955 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதேர் பாஞ்சால் தொடங்கி 1991 ஆம் ஆண்டில் வெளியான 'அகன்துக்' வரையில் முப்பது கதைப்படங்களையும்ஐந்து செய்திப் படங்களையும் படைத்துள்ளார்.

★ ★

ரவீந்நாத் தாகூரின் கதையை மையமாகக் கொண்டு 'பெண் விடுதலை' பற்றிய மன ஆதங்கத்தை வெளிப்படுத்தும் படமான ரே உருவாக்கிய 'சாருலதா' திரைப்படம் மிகச் சிறந்த கலைப்படைப்பாகக் கருதப்பட்டது. ''தங்களுடைய மிகச் சிறந்த படைப்பு இனிமேல் தான் வர வேண்டும் என்று தான் பெரும்பாலான கலைஞர்கள் சொல்வது வழக்கம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் எனது மிகச் சிறந்த படைப்பு 'சாருலதா தான் என்று பெருமையுடன் சொல்வேன்'' என சத்யஜித்ரே குறிப்பிட்டுள்ளார்

★ ★

சத்ய ஜித்ரே தயாரித்த படங்களில் 'சதரஞ்ச் கே கிலாடி' என்ற கதைபடத்தையும் ''சத்காதி'' என்ற செய்திப் படத்தையும் தவிர ஏனைய அனைத்தும் ரேயின் தாய் மொழியான வங்காள மொழியிலேயே தயாரிக்கப்பட்டன.

★ ★

முப்பத்தேழு வருடங்களாக கலை உலகில தனக்கென ஒரு தனியான இடத்தைப் பிடித்து உலகின் தலைசிறந்த ஒஸ்கார் விருது முதல் 'பாரத ரத்னா' விருது வரையிலான பல்வேறு விருதுகளைப்பெற்ற சத்யஜித்ரே தமது எழுபத்தொரு வயதில் உலக திரைப்பட சரித்திரத்திற்கு தனது பெயரை விட்டுச் சென்றார்.

ஆம் அண்மையில் கல்கத்தாவிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றில் இருதய நோய் காரணமாக இயற்கை எய்தினார். உலக அரங்கம் தனித்துவம் மிகுந்த ஒரு இயக்குனரை இழந்து வெறுமையாய் நிற்கிறது.

# கலாபூர்வமானவார்ப்புகளுக்கு மனோலயம் அவசியம்

விக்கிரகங்களைவார்ப்பது, கற்சிலை செய்வது என்பது பாஸ்கரன் குடும்பத்தின் பரம்பரைத் தொழில். படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, நீராவியடி பிறவுண் வீதியில் ஒரு தொழில் நிறுவனத்தை பாஸ்கரன் நடத்துகிறார் என்றால் அதற்குக் காரணம் அவரது தந்தை சுப்பிரமணியந்தான். தந்தையே மைந்தருக்குப் பயிற்சி கொடுக்கும் மரபு இந்தத் தொழிலில் பரம்பரையாக இருந்துவருகிறது. பாஸ்கரனுடன் இணைந்து அவரது தம்பி சரவணபவனும் (வயது 35) தொழில் செய்து வருகிறார். அவர்களுக்கிடையில் இதுவரை ஊடல் இருந்ததில்லை. இருவரும் கடுமையாக உழைத்து இன்று உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். இந்தத் தொழிலில் பெரியவர்களுக்கு இருக்கும் நாட்டம் இவர்களது பிள்ளைகளுக்கு இருக்குமா?


அந்தக் கதையை பாஸ்கரன் சொல்கிறார் கேளுங்கள்.

இந்தத் தொழிலைச் செய்வதற்கு எங்கள் விஸ்வபிரம்ம கோத்திரத்தைத் தவிர வேறு யாரும் இல்லை இது எங்கள பரம்பரைத்தொழில் இதை எங்களால் கைவிடமுடியாது. எனக்குப் பிறகு என்மகனை தொழிலில் ஈடுபடுத்தப்போகிறேன். வார்ப்புவேலை, மற்றும் கற்சிலை செய்வதென்பது ஒரு முக்கியமான கைங்கரியம். சமுதாயத்தில் ஒருமதிப்பான தொழில். திருப்பணிச் சடமைகளில் உள்ள பல பெரியவர்கள் வந்து போவார்கள். அதனால் ஒரு மனத்திருப்தி. தொழிலில் வியாபார நோக்க மில்லை.

## தெய்வ தத்துவக்கலை

சிலை வடிக்கும் கலையை இறைவழிபாட்டுடன் இணைத்துப் புனிதமாக்கி வருகிறார்கள் ஆச்சாரி பாஸ்கரன் சகோதரர்கள். இவர்களில் கலா சிருஷ்டிகளுக்கு அடிப்படையானவை ஆகம விதிகள், பாசுரங்களையும், திவ்ய பிரபந்தங்களையும், புராணங்களையும் நன்குணர்ந்து ஆகம விதிகளுக்கு அமைய வரைவிலக்கணங்களை வகுத்து தமது ஆக்கங்களை செய்து வருகிறார்கள். மற்றும் படி தொழிலுக்கு பெருமை சேர்ப்பது இவரது மனோரதம் அருணகிரிநாதர் சிலை ஒன்றை வார்ப்பதற்கு அண்மையில் பொருந்தியிருக்கிறார் ஆச்சாரி பாஸ்கரன். செழிப்பான கற்பனை அவருக்கு. அருணகிரிநாதரின் ஜடா பகுடம் அஞ்சலிஅஸ்தம், அவரின் ஆளுமை எல்லாம் பாஸ்கரனின மனதில் வியாபிக்கிறது. வெண்கலத்தில் வார்க்கப்பட்ட ஒரு வடிவமைப்பில் மிகத் துல்லியமான கோடுகளையும், நெளிவு சுழிவுகளையும் செதுக்கி அருணகிரிநாதரின் ஆழத்தைப் பிரதிபலிக்கும் முகத்தோடு மரபிலிருந்து விடுபடாமல் அருணகிரிநாதரை சிலையாய் வடிக்க வேண்டும் என்பது அவரது ஆதங்கம். ஒரு சமயம் சேக்கிழார், திருமூலர் ஆளுமைச் சிலையில் செதுக்க சிதம்பரத்திலிருந்து தருவிக்கப்பட்ட வரைபடமும், குறிப்பும் சேக்கிழாரின் தோற்றத்தை மிகப் பிரமாதமாகச் சிலையில் வடிக்க உதவின என்று ஞாபகப்படுத்துகிறார்.

ஆச்சாரி பாஸ்கரன் ஒரு சுறுசுறுப்பான பேர்வழி. மிகவும் ஆசாரமாக இருக்கிறார். இவருக்கும் இவரது சகோதரர் சரவணபவனுக்கும் திருவுருவச் சிலைகளை மட்டுமே செய்யும் நிர்ப்பந்தம் இல்லை கல்லிலே பல வண்ணங்களைக் காணலாம். ஆனால் உண்மை வாழ்க்கையை இவர்களால் தொட முடிவதில்லை. இந்த மரபிலே இருக்கிற வரை விலக்கணங்களை மீறி உணர்ச்சிப் பாங்கான வேறு சிற்பங்களை வடிக்காமல், மரபு நிலையிலேயே நிற்பது இவர்களது வழியாகும். வேறு கோலங்களில் பரீட்சார்ந்து முயற்சி வேண்டாம் என்கிறார் ஆச்சாரி பாஸ்கரன் ஆனால் புதிய மாற்றங்களை ஏற்றுக் கொண்டு முலாம்பூசும் சாதனத்தைப் (Electro Plating) பயன்படுத்துகிறார் பாஸ்கரன் இத்தொழிலின் சம்பிரதாயத்தைத் தளர்த்தி எதிர்மரபைத் தோற்ற விரும்பாமல் அவர் தன்வேலையைத் தொடர்கிறார்.



யாழ்ப்பாணத்தில் இந்தத் தொழிலில் ஈடுபடும் குடும்பங்கள் நான்கு இருக்கின்றன என்கிறார் பாஸ்கரன். விஷ்வகுல வழித்தோன்றலாக கருதும்பஞ்சகம்மாளரின் ஒரு பிரிவினரான இந்தக் குடும்பங்களில் வயோதிபரான மூத்தவர்களே இந்த வேலையை இப்போது செய்கிறார்கள் காலம் மாறி வருகிறது. இளைஞர்கள் சிலர் பௌதீக வாழ்விற்கான வேறு தொழிலைச் செய்து வருகிறார்கள் வயதில் இளையவர்கள் இந்தவேலையைத் தொடர்ந்து செய்வார்கள் என்பதில் நிச்சயமில்லை என்கிறார் பாஸ்கரன். இந்தியாவைப் போல் வார்ப்பியல் பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாகவும் இல்லை வேறுயாரும் பழகும் வகையில்லாமல் இந்தத் தொழில் கார்லைப் போக்கில் அருகிப் போகலாம் என்று அஞ்சப்படுகிறது. விஷ்வ பிரம்ம கோத்திரத்தை தவிர மற்றவர்கள் இந்தத் தொழிலைப் பழகக் கூடாது என்ற கடுமையான நியதியும் இல்லை. இரண்டு மூன்று தலைமுறைகளுக்குமுன் இந்ததொழிலைச்செய்யும் குடும்பங்கள் ஒரு கட்டுப் பெட்டி அமைப்பாக மாறி புதிய உறுப்பினர்களுக்கு கதவைத் திறக்காமலிருந்ததினால் இந்தத் தொழில் அதன் எல்லைக்கப்பால் செல்ல முடியவில்லை, தமிழ் கலாசாரத்துக்கும் கவின் கலைகளுக்குமிடையிலான இறுகிய பிணைப்பு உலகம் அறிந்தது. கலா விமர்சகர்களும், தமிழபிமானிகளும் இந்தத் தொழிலுக்கு ஒரு புதிய அணுகுமுறையை தயார் செய்யவில்லையானால் இந்தத் தொழில் மெல்ல அழிந்து போகும் ஒரு ஆபத்து இருக்கிறது.

பேட்டி -- மதன்

## பொருளாதாரத் தடை

அரசின் பொருளாதாரத் தடைகள் சிற்பிகளின் வாழ்க்கையை பாதித்திருப்பது எத்தனை பேருக்குத் தெரியும்? கற்சிலைகளைச் செய்வதற்கு வேண்டிய கருங்கல் ஒரு பெரிய கேள்விக் குறி என்கிறார் பாஸ்கரன்வவுனியாவிலிருந்து கருங்கல் தருவிக்கப்படுவது தடைப்பட்டிருப்பதால் பரம்பரைத் தொழில் வருமானத்தை நம்பி வாழ்ந்த இந்தக் குடும்பங்களின் நிலை பரிதாபமானது. உருக்கி வார்க்க தேன் மெழுகு, வெள்ளை மெழுகு இல்லை இதனால் தொழில் முடங்கிப் போய்க் கிடக்கிறது திருவாசி செய்வதற்கான செப்புத் தகடு, பித்தளைத் தகடு, எவர்சில்வர் தகடு ஆகியன இல்லாததால் சும்மாஉட்கார்ந்திருக்க வேண்டிய நிலை போதாதென்று வெள்ளி முலாம் பூச மின்சாரமும் இலலை. இரசாயனப் பொருள்களும் இலலை என்று அங்கலாய்க்கிறார் பாஸ்கரன். நயினாதீவு நாகபூஷணி அம்மன் கோயிலும் நந்தி உலோகத் தகடு இல்லாமல் கடந்த இரண்டு வருடங்களாக ஒரு பக்கத்தில் 'அசை' போடுகிறது. கும்பாபிஷேகம் செய்வதற்கான அஷ்டபந்தன மருந்து வரத்தில்லை. சிமெந்து தடையால் கோயில்களில் வேலை நடைபெறுவதில்லை. தொழில் காரணமாக இந்தக் குடும்பங்கள் கோயிலைச் சார்ந்திருக்குமாறு செய்கிறது என்று கூறும் பாஸ்கரன், அரசியல் பொருளாதாரத் தடையால் கோயிலுக்கும் தமக்குமிடையிலான இப்டரஸ்பர சார்பு பாதிக்கப்படுகிறது என்கிறார்.

## புகழ் ஆரம்

கற்சிலைகளை விட வார்ப்பு வேலைகளில்பாஸ்கரன்முனைப்பாக ஈடுபடுவதாகச் சொல்கிறார். வார்ப்புத் தொழில் இவருக்குக் கைவந்த கலை. வார்ப்பு வேலைக்கு ஒரு பாஸ்கரன் என்று போற்றப்படும் இவருக்கு, சிற்பஞானகேசரி, சிற்பகலாஜோதி என்ற விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன.

தான் பின்பற்றும் முறை ஆரிய சிற்பமுறையா அல்லது திராவிடசிற்பமுறையா-இதில் எது என்பது பற்றிய கவலை பாஸ்கரனுக்கு இல்லை. சிற்பக் கலை பெரும்பாலும் கோயில்கள் மூலமே உருவாகி வந்தமையால், சமயஉணர்வை நிராகரிக்காமல் திருவுருவங்களை வார்த்துச் செப்பனிடுவதும், கல்லில் சிலை வடிப்பதும் தனது வழக்கம் என்கிறார் ஆச்சாரி பாஸ்கரன். திருமுறைபாடியவர்களில் எட்டுப் பேர்களின் சிலைகளைப் பாஸ்கரன் வடித்திருக்கிறார். இது யாழ்ப்பாணத்தில் ஒரு புது முயற்சி என்று போற்றப் படுகிறது.

நவீன மேலைத் [தேசக் கல்வியில் இவருக்குப் பரீட்சயம்கிடையாது. இப்போது சிற்பக்கலை பற்றிப் படிப்பதிலும் ஆராய்வதிலும்ஈடுபாடு காட்டி வருகிறார்.

இவரது படைப்புகளை திருவுருவச் சிலைகள் திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு. யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் சிறப்புற அமைந்திருக்கின்றன.

ஆச்சாரி பாஸ்கரனது படைப்புகளான திருவுருவச் சிலைகள் திருக்கோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் சிறப்புற அமைந்திருக்கின்றன.

# பிக்குகள் விஜயம்:

# இலங்கைத் தீவில் சமாதானத்தின் கதி

## நிலாந்தன்

இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்து சென்ற பின்பு கடந்த கிழமைதான் முதன் முதலாக பிக்குகள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்குவந்து போயுள்ளது.

இதற்கு முன்பு கிறிஸ்தவ தூதுக்குழுக்கள் யாழ்ப்பாணம் வந்து போயின. இதனால் தூண்டப்பட்டேபிக்குகள் குழுவொன்று யாழ்ப்பாணம் வர முன்வந்தது எனலாம். கிறிஸ்தவ தூதுக்குழுவினர் எத்தகைய பரபரப்புமின்றி வந்து போயினர். அவர்கள் தீர்வுகள் எதையும்கொண்டு வரவில்லை குடாநாட்டிற்குவரும் வழமையான சுற்றுப் பாதையூடாக, பயணக் கஷ்டங்களை அனுபவித்தபடி அவர்கள் வந்து போனார்கள். இங்கு தாங்கள் கண்டவற்றையும் கிரகித்தவற்றையும், கொழும்பில் அவர்கள் நேர்மையாக எடுத்துச் சொன்னார்கள். ஆனால் பிக்குகளோ வருவதற்கு முன்பு அதிகம் பரபரப்பை ஏற்படுத்தினார்கள். கொழும்பில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவையும் ஏனைய தமிழ்க்குழுக்களையும் சந்தித்துக் கதைத்தார்கள். இலங்கை அரசிடமிருந்து விசேடமான செய்தியோடு யாழ்ப்பாணம் வரப்போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பையும் பரபரப்பையும் உண்டாக்கினார்கள். கிறிஸ்தவத் தூதுக் குழுக்களைப் போலல்லாது அவர்கள் குடாநாட்டிலுள்ள ராணுவ முகாம்களினூடாகவே குடாநாட்டிற்குள் பிரவேசித்தார்கள்.

இலங்கையின் அரச மதம் என்று வர்ணிக்கப்படத்தக்க பௌத்தம், இலங்கை அரசியலில் மற்றெந்த மதங்களை விடவும் மிகவும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு மதமாகும். அந்த வகையில் இலங்கையில் பௌத்தம் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு மதமாகவும் உள்ளது எனவே பிக்குகளின் வருகைக்குத் திட்டவட்டமான அரசியல் பரிமாணம் உண்டு. இலங்கையில் பிக்குகளின் அரசியல் ஈடுபாட்டை மிக ஆரம்ப காலங்களிலிருந்தே காணமுடியும். பண்டா - செல்வா உடன்படிக்கை உருவானபோது சுமார் இருநூறு பிக்குகள் பண்டாரநாயக்காவின் வதிவிடத்தின் முன்பாக சத்தியாக்கிரகம் செய்தார்கள். சத்தியாக்கிரகம் ஆரம்பமாகி இரண்டு மணித்தியாலங்களில் பண்டாரநாயக்க உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார். பின்னர் வேறு காரணங்களிற்காக பண்டாரநாயக்காவைச் சுட்டுக் கொன்றவர்களும் இரு பிக்குகளே. 71 இல் ஜே. வி. பி. கிளர்ச்சியின்போது அரசுப் படைகளைத் தாக்குவதான முக்கிய தீர்மானம் களனி பல்கலைக் கழகத்தின் பிக்குகள் விடுதியிலேயே எடுக்கப்பட்டது. ஜே. வி. பி யின் தலைமைப் பீடத்தில் மூன்றாவது ஆளாக வர்ணிக்கப்படும் டி. எம். ஆனந்த (திசநாயக முதியென்சலாகே நந்தசேன) ஒரு முன்னாள் பிக்குவே. இந்திய -இலங்கை உடன்படிக்கை உருவாகிய காலம் அதை எதிர்த்து முதலில் வீதிக்கு வந்தவர்கள் பிக்குகளே. ஜே.வி. பி.யின் இரண்டாவது கிளர்ச்சியின் போது பிக்குகள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டனர். காணாமல் போயினர். பலர் காவி உடைகளைக் களைந்து விட்டுத் தலைமறைவாயினர். பலர் வெளிநாடுகளிற்கு ஓடிப் போயினர். கடந்த வருடம் அமைச்சர் தொண்டமான் முன்வைத்த தீர்வுத் திட்டத்தை முதலில் வலிமையாக எதிர்த்தவர்களும் பிக்குகளே. இவ்வாறு இலங்கை அரசியலில் முக்கியமான நேரங்களில் எல்லாம், குறிப்பாக இந்திய, தமிழின எதிர்ப்பு என்று வரும்போது அபிப்பிராயங்களை உருவாக்கியவர்களாகவும், அபிப்பிராயங்களைத்திரட்டித் தலைமை தாங்குபவர்களாகவும் பிக்குகளும், மகா சங்கத்தினரும் செயற்பட்டிருப்பதைக் காணலாம்.

உலகிலேயே பௌத்தம் ஒரு அரசு மதத்திற்குரிய சலுகைகளை அனுபவிப்பது இலங்கையில் மட்டுந்தான் தேரவாத பௌத்த சிந்தனையின் ஆதியான மூலச் சுவடிகளைத் தேடிப்போகும் எவரும் இலங்கையைத்தான் வந்தடைவர் ஆனால்துரதிர்ஷ்டவசமானது என்னவெனில், இலங்கைத் தீவில் மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டது ஏதாவது இருக்குமானால் அது அநேகமாக பௌத்தமாகவே இருக்க முடியும் என்பதே. முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனா எழுதிய *Men And Memeries* (மனிதர்களும் நினைவுகளும்) என்ற நூல் சமீபத்தில் கொழும்பில் வெளியிடப்பட்டது அதில் ஜே ஆர். தன்னை ஒரு வாழ்நிலை பௌத்தன் (*Practising-Budhist*) என்று குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் நடைமுறையில் பௌத்தம் எவ்வாறுள்ளது என்பதை புரிந்து கொள்ள இந்த ஒரு உதாரணமே போதும்.ராணுவத்தளபதிகள் பதவியேற்றதும் மகாநாயக்கர்களிடம் ஆசி வாங்கச் செல்கிறார்கள். மகாநாயக்கர்களோபோர் முனைக்குச் சென்று யுத்தத்தில் ராணுவத்தின் வெற்றி வேண்டிப் பிரித் ஓதுகிறார்கள்.

யமானது பிக்குகள் கொணர்ந்த தீர்வு அல்ல; பிக்குகள் தீர்வு குறித்தும் சமாதானத்தைக் குறித்தும் சிந்திக்கிறார்கள் என்பதே.

தாங்கள் கொணர்ந்த தீர்விலுள்ள பலவீனங்கள் பிக்குகளிற்கு நன்றாகவே தெரியும். ஏனெனில் இலங்கையில் பிக்குகள் மிகவும் அரசியல் மயப்படுத்தப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அமைச்சர் தொண்டமானின் தீர்வை முதலில் எதிர்த்த பிக்குகள் அத்தீர்வுத் திட்டத்திலுள்ள தமிழரிற்கு சாதகமான அம்சங்களை நுட்பமாக இனங்கண்டு எதிர்த்திருந்தார்கள். எனவே யாழ்ப்பாணம் வந்த பிக்குகள் தாங்கள் கொண்டு வரும் தீர்வு பலவீனமானது எனினும் முதலில் யாழ்ப்பாணம் வந்தால் சரி என்ற நோக்கத்தோடு வந்தவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இலங்கை அரசின் ஆசீர்வாதங்கள் இன்றி பிக்குகள் யாழ்ப்பாணம் வந்திருக்க முடியாது. தென்னிலங்கையின் குழப்பிப்போயுள்ள அரசியலின் மையமாக இன்று உடுகம்பொல மாறியிருக்கிறார். சிங்கள பொதுசனத்தின் கவனத்தை உடுகம்பொலவிடமிருந்து திசை திருப்ப பிக்குகளின் வடபகுதி விஜயம் அரசிற்கு உதவக்கூடும் மேலும்,

இத்தகைய பின்னணியிலிருந்து பிக்குகள் குழுவொன்று சமாதானத்திற்கான முன்முயற்சிகளில் ஈடுபடமுன்வந்தமை என்பது இலங்கை அரசியலைப்பொறுத்தவரை நூதனமானது. சகதிமிக்க மல்வத்தை அஸ்கிரிய பீடங்களின் பிரதிநிதிகள் எவரும் இக்குழுவில் இடம் பெறவில்லை. அந்த வகையில் இக்குழு பலவீனமானது எனினும் முக்கியத்துவம் உடைய ஒரு முதல் அடி எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதே உண்மை.

அவர்கள் கொணர்ந்த தீர்வு மிகவும் பின்தங்கியது. தமிழர்களின் தாயகத்தை நிராகரிப்பது, அதே சமயம் மகாசங்கத்தினர் விரும்பக்கூடிய ஒரு தீர்வுக்குரிய வரையறைகளை மேற்படி தீர்வு உணர்த்துகிறது எனலாம். பாராளுமன்றத் தெரிவுக்குழு தீர்வு குறித்தும் கொண்டுள்ள உத்தேச அடிப்படைகளையும் இத்தீர்வு பிரதிபலிக்கிறது எனலாம். ஏனெனில் பிக்குகள் இங்கு வர முன்பு தெரிவிக்குழுவைச் சந்தித்தார்கள். தெரிவிக்குழு தன்னிடமுள்ள தீர்வுக்கான அடிப்படைகளை பிக்குகளிடம் கூறி அதற்குப் புலிகளின் எதிர்வினை என்னவாயிருக்கும் என்பதை அறிய முற்பட்டிருக்கலாம். புலிகள் நேரடியாக அழைக்காததினாலேயே தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வரவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வரத் தயங்குவதற்குரிய முக்கிய காரணம் அது இன்னமும் ஒரு தீர்வுக்கு வந்து சேரவில்லை என்பதே. இங்கு வந்து புலிகளிடம்தர அவர்களிடம்திட்டவட்டமான தீர்வு ஏதும் கிடையாது.

இவ்வாறு தெரிவுக்குழு வராத இடத்திற்கு பிக்குகள் குழுவந்திருக்கிறது.இங்குமுக்கி

பலவீனமான பிரேமதாஸ அரசு சமாதானத்திற்காக வெளிப்படையாகச் செயற்படத்தயங்குகிறது. மறைமுகமுகவர்களைப் பயன் படுத்த முனைகின்றது. ராணுவமோ தொடர்ந்தும் விபரீதமாக வளர்ந்து கொண்டே போகிறது சமாதானம் ராணுவத்தைப் பலவீனப்படுத்திவிடும் என ராணுவத்திலுள்ள தீவிரவாதிகளும், பௌத்த பீடங்களும். அநேகமான எதிர்க்கட்சிகளும் கொழும்பிலுள்ள தமிழ்க்குழுக்களும் நம்புகிறார்கள் யுத்தத்தின் தொடர்ச்சியாகராணுவம்ஒரு கட்டத்திற்கும்அப்பால்அரசின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சிந்திக்கக் கூடிய நிலைமைகள் உருவாகிவிடப் போகின்றன. இது இலங்கை அரசிற்கும் தெரிகிறது யுத்தத்தை நிறுத்த முடியாமலும், சமாதானத்தை இழக்க விரும்பாமலும் இலங்கை அரசு தடுமாறுகிறது. இதனால் அது எப்பொழுதும் தற்காப்புநிலையிலிருந்துகொண்டு யுத்தத்தையும் சமாதானத்தையும் சமாந்திரமாகக் கொண்டுபோக விரும்புகிறது. ஆனால் ராணுவத்தின் விபரீதமான வளர்ச்சியின் தர்க்க விளைவுகள் நேர் மாறானவைகளாக இருக்கப் போகின்றன.

குடாநாட்டைத் தாக்குவதை தனது இறுதி இலக்காகக் கருதும் இராணுவம் தாக்குவதற்குரிய தயாரிப்புக்கள் முடிந்ததும் ஒருநாள் இலங்கை அரசிடம் தாக்குதலை ஆரம்பிப்பதற்கான அனுமதியைக் கோரப்போகிறது. அப்போது இலங்கை அரசு குடாநாட்டுத் தாக்குதலின் அரசியல் விளைவுகளைக்குறித்து அதாவது அவ்வாறான ஒரு தாக்குதல் நிகழுமிடத்து புலிகளுடனான சமாதானம் இழக்கப்பட்டுவிடும் என்பது குறித்து அஞ்சிதாக்குதலிற்கான பச்சைக் கொடியைக்காட்டத்த வறுமானால்,

இராணுவம் அரசின் கட்டுப்பாட்டை மீறி தன்னிச்சைப்படி முடிவெடுக்கக்கூடும் அப்போது எதிர்க்கட்சிகள்வழமைபோல தீர்க்கதரிசனமின்றி இராணுவத்தை ஆதரிக்கப் போகின்றன. எனவே, யுத்தத்தையும் சமாதானத்தையும் சமாந்திரமாக நகர்த்த முயல்வதன் முடிவு, இலங்கை அரசியலில் இராணுவத்தை ஒரு கட்டுப்படுத்தவியலாத பூதமாக மாற்றிவிடப்போகிறது.

யுத்தத்தை நிறுத்தவும் சமாதானத்திற்குரிய துணிச்சலான அடிகளை எடுத்து வைக்கவும் இலங்கை அரசிடம் பலம் இல்லை. இந்நிலையில் தென்னிலங்கையில் சமாதானத்தைக் குறித்தும், யுத்த நிறுத்தம் குறித்தும் அபிப்பிராயங்களை உருவாக்கக் கூடிய ஒரே சக்தியாக பிக்குகளே உள்ளார்கள். யுத்தத்திற்கு எதிரான சிந்தனை முதலில் பிக்குகளிடமிருந்தே ஆரம்பமாகவேண்டியுள்ளது. சமாதானத்தைக் குறித்து சிந்திக்கவேண்டிய பொறுப்புள்ள இடத்தில் நிறுவன பலத்துடனும் இருப்பவர்கள் பிக்குகள் தான். தீர்வு முக்கியமல்ல. அது அவசரமாக உருவாக்கப்படக் கூடியதும் அல்ல.முக்கியமானதுதீர்வைக் குறித்து விவாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைஉண்டாக்கக் கூடிய யுத்த மற்ற சூழலே. பிக்குகள் தீர்வுகளைப் பற்றிச் சிந்திப்பதை விடவும் குறைந்த பட்சம், யுத்த மற்ற நிலைமைகளை உருவாக்கப்பாடுபடுவதே மிகவும் பொருத்தமானதாயிருக்கும்.

அமைச்சர் தொண்டமானிற்கு முன்னரும் பின்னரும் தென்னிலங்கையில், சமாதானத்தைக் குறித்து வெளிப்படையாகவும் துணிச்சலாகவும் பேசக்கூடிய அரசியல் வாதிகள் யாரும் இல்லையென்றே தோன்றுகிறது. அரசியல் வாதிகளால் முடியாத நிலையில் பிக்குகளை மறைமுகமுகவர்களாகப்பயன் படுத்தி சமாதானத்திற்கான சூழலைஉருவாக்க முடியுமா என்று இலங்கை அரசு சிந்திப்பது போல தெரிகிறது ஏனெனில், இன்று இலங்கைத்தீவில் சமாதானத்தைக்குறித்துச் சிந்திக்கும் எவரும் ஒன்றில் தொண்டமானைப்போல் (அவரே கூறியதுபோல) சாகத் தயாரான முதியவர்களாக இருக்கவேண்டியுள்ளது அல்லது துறவிகளாக இருக்க வேண்டியுள்ளது.

---

## 45ம் நாள் நினைவஞ்சலி



| வீரப் பிறப்பு | வீரச் சாவு |
|---|---|
| 27 — 07 — 1973 | 19 — 03 — 1992 |

### 2 ஆம் லெப். ஜெயா
### (மாணிக்சம் தியாகராசா)

தமிழினத்தின் துயர்துடைக்க
தரணியிலே வந்துதித்தாய்
சோதனை வேளையிலும்
சாதனை புரிந்து நின்றாய்
சாள்ஸ் அண்ணனின் சிறப்பு படைதனிலே
சீறி எழுந்து போர் புரிந்தாய்
மணலாற்று மண்ணிலே விடுதலைக்காய் உரம் கொடுத்தாய்
மாவீரர் குடும்பம் என்ற மறக்குலப் பெயர்தந்தாய்
ஜெயா நீ இறக்கவில்லை இன்னும் ஆயிரமாய் வளர்கின்றாய்
நீ கொண்ட இலட்சியப்பாதை ஒரு நாள் நிறைவேறும் தம்பி
உன் கல்லறை மலர நாம் கண்ணீர் சிந்துகின்றோம்

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே! இந்த மண் மீட்புப் போரில் 19 - 03 - 92 அன்று மணலாறு கொக்குத்தொடுவாயில் இருந்து முன்னேற முயன்ற இராணுவத்துடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்த எமது அருந்தவப் புதல்வன் மா. தியாகராசாவின் நினைவஞ்சலியை நாம் 02-05-92 நாளை எமது இல்லத்தில் நினைவுகூர இருக்கின்றோம். உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் இதனை ஏற்றுக்கொண்டு சமுகம்தந்து எமக்கு ஆறுதல் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உன் பிரிவை மறவாத
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்

இல.158, D.10,
உருத்திரபுரம்.

(2515)

யாழ்ப்பாணம்



# இலங்கையில் இருப்பது தேரவாத பௌத்தம் அல்ல; ஜெயவர்த்தன பௌத்தம்

"மகாத்மா காந்தியின் கொள்கை வழியில் தன் வாழ்வை அர்ப்பணித்திருந்த, ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுக்கு இந்தியா தீங்கிழைத்து விட்டது" என்று ஜே ஆர். இன் மிக நெருங்கிய சகாவாக அவரது அமைச்சரவையிலிருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கடந்த 10ஆம் திகதி ஜே ஆர். ஆல் எழுதி வெளியிடப்பட்ட மென் அன்ட் மெமறீஸ் 'மனிதர்களும் நினைவுகளும்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் குறிப்பிட்டார்.

ஜே ஆரின் மேற்படி நூலில் இந்தியா பற்றிய அவரது நினைவுப் பதிவுகள் கசப்பான முறையிலேயே பதியப்பட்டுள்ளன. இந்நூல் இன்னும் எனக்குக் கைக்கு எட்டவில்லையாயினும் பத்திரிகைக் குறிப்புக்களைக் கொண்டு பார்க்கும் போது இந்தியா ஜே ஆருக்குத் துரோகம் இழைத்து விட்டதான தொனியே தெரிகிறது.

ஜே ஆர். தன்னை ஒரு வாழ்முறைப் பௌத்தனாக வர்ணித்துள்ளதாகவும் ஒரு குறிப்புண்டு.

'காந்திவழி', 'வாழ்முறைப் பௌத்தன்', 'இந்தியாவின் துரோகம்' என்ற 'இந்நூலை ஒட்டிய ஜே ஆர்.பற்றிய பதங்கள் பெரிதும் கவனிக்கத் தக்கவை.

இதில் காந்திவழி அல்லது 'காந்தியவாதி','வாழ்முறைப் பௌத்தன்' என்னும் பதங்கள் கேலிக்குரியவையாகும். வேடிக்கையானவையாகும். இரண்டாண்டுகளுக்கு முன் ஜே. 'ஆர் சண்டே ரைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் காந்தியைப் பற்றிக்குறிப்பிடுகையில் காந்திஒரு அரசின் தலைவராக இருக்க முடியாதென்றும் எந்தவொரு அரசின் தலைவரும் துப்பாக்கியின்றி நாட்டையாள முடியாதென்றும் கூறி தமிழருக்கெதிரான தமது துப்பாக்கிப் பிரயோகங்களை நியாயப்படுத்தினார். அதில் அவர் காந்தியை நிராகரித்திருந்ததுடன் தன்னை ஒரு காந்தியவாதியல்ல என்றும் வெளிப்படுத்தினார்.

ஜே ஆர். இவ்வாறுதன்னை காந்தியத்திற்கெதிரானவராக ஒப்புக் கொண்டிருக்கையில் அவரது சகா அல்விஸ் இப்படிக் கூறியிருப்பது பழைய நாடகங்களில் வரும் கோமாளிகளை நினைவுறுத்துகின்றது. அல்விஸின் இவ்வார்த்தையைப்பற்றி பத்திரிகையாளர் இலங்கைக்கான இந்தியத் தூதர் 'ஜா' விடம் வினவிய போது இது ஒரு தனிமனிதன் வார்த்தை என்று அதனை நிராகரித்தார்.

வாழ்முறைப் பௌத்தன் என்ற பதம் தென்னிலங்கையிற் சிங்கள பௌத்தர்களாலேயே எதிர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் எதிர்த்துள்ள கோணம் வித்தியாசமானது. அரசியற் பரிமாணம் கொண்டதல்ல. அதாவது புலால் உண்ணும் ஜே. ஆர். எப்படி வாழ்முறைப் பௌத்தனாக இருக்க முடியும் என்ற பாணியிலேயே ஆட்சேபனைகள் கிளம்பியுள்ளன. ஆனால் இதனை அரசியற் தளத்தில் நின்று பார்க்கும் போது ஜே. ஆரின் அரசியலையும் நடவடிக்கைகளையும் வாழ்முறைப் பௌத்தனுக்குரிய இலக்கணங்கள் எனக்கொள்வோமானால் பௌத்ததர்மம் என்பதற்குரிய விளக்கம் இம்சையும் கொலையும் தான். பௌத்தத்தின் கெட்ட உதாரணம் ஒன்று தன்னை பௌத்தத்தின் முன்னுதாரணமாக நிலைநிறுத்துவதென்பது இலங்கையின் பௌத்தம் எந்நிலையிலுள்ளதென்பதையே காட்டுகிறது. உண்மையான பௌத்தன் ஒருவன் இலங்கையில் இருப்பானானால ஜே. ஆர். பற்றிய இவ்வர்ணனையைக் கண்டு நிச்சயம் வெட்கித் தலை குனிவான்.

ஜே. ஆர்க்கு இந்தியாவில் துரோகம் என்ற கருத்தை ஆழமாகப் பரிசீலிக்க வேண்டியது அவசியம். அதற்குள் ஒரு அரசியல் உண்மை பொதிந்து கிடக்கின்றது. ஜே ஆரை மூன்றாவது தடவை ஆதிக்கத்துக்கு வரவிடாது தடுத்ததும் அவரை சிங்கள மக்கள் மத்தியில் சற்றும் செல்வாக்கில்லாதவராக ஆக்கியதும் இலங்கை-இந்திய ஒப்பந்தமும் அதன் விளைவுகளுமே தான். இப்பகுதி அரசியல் ரீதியாக சரிவர மதிப்பீடு செய்ய வேண்டும். ஜே. ஆர். தான் உருவாக்கிய அரசியலமைப்புத் திட்டத்தில் எல்லா முறையிலும் தன்னை மையமாகக் கொண்டு தனக்கு சாதகமான முறையிலேயே ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இதன் மூலம் அவர் மூன்றாவது முறை பதவிக்கு வருவதற்கேற்ற வகையில் ஒரு நீக்கற் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு ஆலோசித்திருந்தார் பாராளுமன்றத்தில் 2/3 பங்கிற்கு மேற்பட்ட பெரும்பான்மைபலம் அவருக்கிருந்ததால் அரசியல் சட்டரீதியாக நீக்கற்சட்டத்தைக் கொண்டுவருவதுசாத்தியமாகவேயிருந்தது 77 ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் மூலம் 3/4 பங்கு பெரும்பான்மையின் பலத்தைப் பெற்ற ஜே. ஆர் 83 ஆம ஆண்டு பொதுத் தேர்தலில 2/3 பங்குக்குக் குறையாத பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாதென்பதை உணர்ந்திருந்தார். இந்நிலையில் அவர் பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை நடத்தாது தனது அரசியல் அமைப்புத் திட்டத்தில் தான் உருவாக்கிவைத்திருந்த "சர்வஜனவாக்கெடுப்பு" என்ற ஏற்பாட்டைப் பிரயோகிக்கலானார். சர்வஜன வாக்கெடுப்பு என்ற ஏற்பாட்டை மிகவும் ஒட்டையுள்ள முறையில்தனது விருப்புக்கேற்ப, நேரத்திற்கேற்ப விளக்காளிக்க கூடிய வகையில் அரசியலமைப்புத் திட்டத்தில் அதனை வரைந்திருந்தார். இதனால் பாராளுமன்றப் பொதுத்தேர்தலுக்குப் பதிலாக சர்வஜன வாக்கெடுப்பு என்பதை நிகழ்த்தலானார். சர்வஜன வாக்கெடுப்பில் 52.ம். வரையான வாக்குக்களைப் பெற்று பாராளுமன்றத்தில்75.| திற்கு மேற்பட்ட ஆசனங்களைக் காப்பாற்றிக் கொண்டார். இதன்படி பார்க்கையில் ஒரு பாராளுமன்றப் பொதுத்தேர்தல்நிகழ்ந்திருக்குமாயின் 52% மான ஆசனங்களை மட்டும் தான் ஜே. ஆர். பெற்றிருக்க முடியும் இதுஅரசியலமைப்புத் திட்டத்தல் வக்கேற்ற மாற்றங்களைச் செய்ய முடியாத நிலையையுருவாக்கியிருக்கும். ஆனால் ஒட்டையான சர்வஜன வாக்கெடுப்பு என்னும் முறையை வைத்திருந்ததன் மூலம் தான் மூன்றாம் முறை பதவிக்கு வரக்கூடியமுறையில் அரசியலமைப்புத் திட்டத்தில் புதிய ஏற்பாடுகளைச் செய்யக் கூடிய வல்லமையைப் பெற்றார்.

தனது பாராளுமன்ற உறுப்பினர்களிடம் (அமைச்சரவை உட்பட) திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதத்தை வாங்கி வைத்துக் கொண்டு 2/3 பெரும்பான்மைப் பலத்தையும்பேணிக்கொண்டிருந்த ஜே ஆர். இவற்றின் மூலம் தனது பதவியை மூன்றாம் முறை தக்க வைக்கலாமென நம்பிக்கொண்டிருந்தார். ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, ஜே. வி. பி யின் வளர்ச்சி இந்திய இராணுவத்தின் பிரசன்னத்தைவைத்துக் கொண்டு ஐ தே. க, எம்பிகள் மற்றும் நெருங்கிய ஆதரவாளர்கள் என்பேரீ ஜே வி. பி யால் கொலைப்படத்தொடங்கினர். இந்நிலையில் ஒவ்வொருஎம்பிக்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பாதுகாப்பளிப்பதென்பதும்ஜே ஆர்.ஆல் முடியமல் போய் விட்டது. பாராளுமன்றத்துக்குள் ஜே ஆர் ஐக் குறிபார்த்து வீசப்பட்டகைக் குண்டு அந்த சிலரைப் பலி கொண்டது. ஜே. ஆரும் மயிரிழையில் உயிர் தப்பினார். இவ்வாறாகப் பாதுகாப்பென்பென்பது ஐ தே. க. வைச் சேர்ந்த யருக்கும் இல்லையென்றதாயிற்று. இதனால் ஐ. தே. க. எம்பிக்கள் உயிரை முதன்மையாகமதித்த சூழலில் பதவி பறிபோகக்கூடிய நிலையைப் பொருட்படுத்தாது ஜே ஆரை எதிர்க்கத் தொடங்கினர்?

ஒரு பகுதியினர் ஐ தே. க. வுக்குள் ஜே ஆரை எதிர்ப்பதன்மூலம் தமது உயிரைக் காப்பற்ற முயலலாயினர். இன்னொரு பகுதியினர் இச் சூழலைப் பயன்படுத்தி ஜே ஆரை வீழ்த்தித்தாம்பதவிக்கு வர முயலலாயினர். எனவே எவ்வாறாயினும் ஜே ஆர். ஐ தே க. வுக்குள் கடுமையாக எதிர்க்கபடலாயினார். இந்நிலையில் ஜே ஆர் மூன்றாவது தடவை பதவிக்குவர வேண்டுமென்ற எண்ணத்தைக் கைவிட வேண்டியே ஆகிற்று.

மு. திருநாவுக்கரசு

இந்திய இராணுவத்துடன் ஒன்றிணைந்து ஒருபுறம் புலிகளை ஒடுக்குவதும் மறுபுறம் தென்னிலங்கையில பதவிக்கு வருவதும் சாத்தியப்பட்டிருக்குமானால் இந்தியா தனக்குத் துரோகம் இழைத்திருக்குமென்ற கருத்தைக் கொண்டிருக்க மாட்டார். அவர் இந்தியாவைப் பயன்படுத்தலாமென நம்பியே இவ் ஒப்பந்தத்தைச் செய்யலானார். ஒப்பந்தத்தின் பின் ஒவ்வொரு கணமும் இந்தியா ஜே ஆரைப் பாதுகாக்க முயற்சித்தது தான் ஆனால் தென்னிலங்கையின் யதார்த்தம் அதற்கு இடம் கொடுக்கவில்லை ஜே ஆர். வளர்த்துவிட்டிருந்த இனவாதம் இப்போது ஒப்பந்தத்தையொட்டி அவருக்கு எதிரானதாக மாறிய போது அவர் செயலற்றவரானார் இந்த நிலையில் மானசீகமாக இந்தியா அவரைப் பாதுகாக்க முனைந்த போதிலும் இந்தியாவுடன் இணைந்து தன் நிலையைத் தக்கவைக்க அவர் முனைந்த போதிலும் இவரால் வளர்த்துவிடப்பட்ட இந்திய எதிர்ப்பும் தமிழின எதிர்ப்பும் இவரை நோக்கி எழுந்த போது அவர் இந்த ஒப்பந்தம்தான் தன் பதவி போகக் காரணம் என்றுகலங்கலானார். எனவே ஜே.ஆர். இந்தியாவின் துரோகம் எனக்கருதுவது தான் பதவிக்கு வரமுடியாத புறநிலைச் சூழலை ஒப்பந்தமும் அதன் விளைவுகளும் தோற்றுவித்து விட்டது என்ற அர்த்தரீதியிலேயே தவிர வேறல்ல.

ஒரு அந்நிய படை இலங்கைக்கு வரவேண்டியேற்பட்டதென்ற வேதனையில் இவர் இதனைச் சொல்லவில்லை. தான் மானசீகமாக ஓர் அந்நிய எதிர்ப்பாளன் அல்ல என்பது ஜே. ஆருக்குத் தெரியும். இந்தியா துரோகம் இழைத்துவிட்டது என்ற வாக்கியத்தை ஜே ஆரும் அமிரும் சம்பந்தப்பட்ட ஒரு விடயத்தில் ஒப்பிட்டு ஆராய்வது சுவாரஸ்யமானது. 82 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் இருந்து கனக்கெதிரான வாக்குகள் விழுமேயானால் தான் வெற்றிபெறமுடியாதென்பதை ஜே. ஆர். அறிந்திருந்தார். இதனால் தமிழ்மக்கள் தேர்தலில் பங்குகொள்ளாமல் விடுவார்களேயானால் 50வீதத்துக்குக் குறையாத வாக்குகளைப் பெறுவது சாத்தியமென நினைத்தார். எனவே தமிழ்மக்களை தேர்தலில் யாருக்கும் வாக்களிக்காமல் செய்வதே பிரதான வழியென அவர் முடிவுக்கு வந்தார். இதன் பிரகாரம் அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கத்துடன் ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். கூட்டணி தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றும் அதன் மூலம் தான் பதவிக்கு வருவது சாத்தியப்பட்டால் அமிர்தலிங்கத்துக்கு சாதகமாக நடந்து கொள்வதாகவும் குறிப்பிட்டார். இதன்மூலம் அமிர்தலிங்கம் தேர்தல் பகிஷ்கரிப்புக் கோசத்தை முன்வைத்தார். இது ஜே ஆருக்கு சாதகமாக அமைந்தது இதைப் பேராசிரியர் அரசரட்ணம் தனது நூலொன்றில் எழுதியுள்ளார். உண்மையில் தமிழ் மக்கள் தமதுவாக்குகளை அப்போதஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட குமார் பொன்னம்பலத்துக்காவது போட்டிருந்தால் அளிக்கப்பட்டவாக்குகளில் 50% மேற்பட்ட வாக்குக்களை ஜே. ஆர். முதல் சுற்றில் பெற்றிருக்க முடியாதென்பதை புள்ளி விபரங்கள் காட்டுகிறது. இரண்டாவது விருப்பத்தேர்வு வாக்கைக் கணக்கிடுபவர்கையில் ஜே. ஆர். தவிர்ந்த எஸ். எல் ஏ.பி. அல்லாத ஏனைய மூன்று உறுப்பினர்களினதும் வாக்குக்கள் எஸ் எல். ஏ.பி அபேட்சகராகிய கொப்பேகடுவவினால் பதிபப் பட்டிருந்ததால் கொப்பேகடுவ வெல்லுவது சாத்தியமாயிருந்திருக்கும் ஏனெனில் தென்னிலங்கையில் ஜே. ஆருக்கு எதிராகப் போட்டியிடும் ஏனைய அபேட்சகர்களிருந்து அளிக்கப்படும் வாக்குகளில் பிரதானமாக ஜே. ஆர். எதிர்ப்பு வாக்குகளாக இருப்பதால் விருப்பத் தேர்வு வாக்குகள் கொப்பேகடுவவிற்கே உண்டு. முதலாவது வாக்கை தமிழ்மக்கள் குமார் பொன்னம்பலத்திற்கும் இரண்டாவது வாக்கை கொப்பேகடுவவிற்கும் அளித்திருப்பார்களேயானால் தான் விழுவதென்பது நிச்சயமாக ஜே ஆருக்குந் தெரியும் எனவே அவர் தனது வெற்றியின் மையத்தைத் தமிழ்மக்களிடமே எதிர்பார்த்தார். இந்தவகையில் அமிர்தலிங்கம் ஜே. ஆருக்கு பெரும்நன்மையே செய்தார். ஆனால் தன்னை நம்பிய அமிர்தலிங்கத்தை ஜே ஆர் ஒரு போதும் காப்பாற்றவில்லை. இறுதியில் அமிர்தலிங்கத்தின் பதவியைக் கூட அவர் பறித்தார். இங்கு அமிர்தலிங்கத்தை மக்கள் நிலையில் வைத்து நான் விளங்கவில்லை. ஆனால் தனிப்பட்ட முறையில ஜே. ஆர் அமிருக்குத் துரோகம் செய்துவிட்டார் என்பதையே விளக்குகின்றேன் எனவே துரோகம் என்பது ஜே. ஆருக்கும் கைவந்த கலையாகும். தத்தம் தேவைக்கேற்ப துரோகம் என்று கூறுவதை விடுத்து மக்களின் தேவைக்கேற்ப விளக்குவதே சரியானது. ஜே. ஆர் மக்கள் வடிவத்திலும் சரி தனிப்பட்ட நண்பர்கள் வடிவத்திலும் சரி துரோகத்தையே புரிந்துள்ளார். எனவே இந்தியா பற்றிய அவரது கருத்துநிலை அவரது பதவி பறிபோக ஏதுவானது என்ற வகையிலேயே தவிர தேசம் வகைப்பட்ட கருத்திலல்ல.

## ஆயுர்வேத வைத்திய முறை புத்துயிர் அளிக்க முயற்சி

(நமது நிருபர்)

ஆயுர்வேதத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வர துரிதநடவடிக்கைகள்மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த பல வருடங்களின் முன் வைத்தியத் துறையில் முக்கிய இடத்தை வகித்து வந்த இந்த ஆயுர் வேத வைத்திய முறை நாளடைவில் மழுங்கடிக்கப்பட்டது

தற்போது சிறிலங்காஅரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடையால் மருந்துகளுக்கு வடக்குக் கிழக்கில ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்த ஆயுர் வேதத்திற்கு முக்கியத்துவம் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று யாழ். செயலகத்தில் யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. யாழ். மேலதிக அரசாங்க அதிபர், திருமலை ஆயுர்வேத உதவிப் பணிப்பாளர், யாழ். மாநகர சபை ஆணையாளர் மற்றும் ஆயுர்வேத வைத்தியர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் ஆயுர்வேத வைத்தியத்தை மீண்டும் பழையநிலைக்கு கொண்டு வருவதற்கான வழிவகைகள் பற்றி ஆராயப்பட்டது. இதன் முதற்கட்டமாக மருந்துகளைத் தயாரிப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கித் தருவதாக அரசாங்க அதிபர் உறுதியளித்துள்ளார். (ச)

## வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழிற் பயிற்சி அளிக்க தனியார் நிறுவனங்கள்

வேலையற்ற பட்டதாரிகளை தனியார்துறை நிறுவனங்களில் தொழிற்பயிற்சிக்கு அனுப்பும் நிறுவனங்களில் ஒன்றாக தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை நியமிக்கப்பட்டுள்ளது.

அதிகாரசபைத் தலைவர் தகவல் அளிக்கையில் வேலையற்ற பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு அவர்களது ஆற்றல்கள் திறமைகளுக்கு ஏற்ப எத்தகைய பயிற்சிகளை விரும்புகிறார்கள் என்பது பற்றி அறிந்து கொள்ளப்படும் என்று கூறினார்.

தொடர்புத்துறை மற்றும் கம்பியூட்டர் பற்றிய அறிவை விருத்தி செய்யவும் பட்டதாரிகளுக்கு உதவுவதற்கு மேலும் ஒருவேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்

முதல் தொகுதியாக 56 பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

# திட்டவட்டமான சமாதான தீர்வை அரசாங்கம் சமர்ப்பிக்கவேண்டும்

## - யாழ். வந்த பௌத்த பிக்குகள் கோரிக்கை

அரசு திட்டவட்டமான சமாதானத் தீர்வொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் வந்து திரும்பிய பௌத்த பிக்குகள் சமாதானத் தூதுக் குழுவின் பேச்சாளர் ஒருவர் கேட்டுள்ளார்.

இப்படி இனப் பிரச்சினைக்கு அரசு சமர்ப்பிக்கும் சமாதானத் திட்டத்தை யாழ்ப்பாணத்தில் புலிப்படைத் தலைவர்களுக்கு எடுத்துச் செல்ல தமது குழு தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பௌத்த பிக்குகள் குழு யாழ்ப்பாணத்தில் சென்ற வாரம் புலிப்படைப் பிரதிநிதிகளுடன் நடத்திய பல சுற்றுப் பேச்சுக்களின்போது, குழு தாமே முன்வைத்த தீர்வு திட்டத்தை புலிப்படைத் தலைவர்கள் திட்டவட்டமாக நிராகரிக்கவில்லை என்றும், ஆனால் திட்டத்தை அரசும் அங்கீகாரம் செய்யவேண்டும் என்று புலிகள் விரும்புவதாகவும் பௌத்த பிக்குகள் தரப்புப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஆனால் பௌத்த பிக்குகள் முன் வைத்த தன்னாட்சிப் பகிர்வுத் திட்டம் புலிகளின் எதிர்பார்ப்புக்கு மிகக் குறைவாக இருப்பதாக யாழ்ப்பாணச் செய்திகள் தெரிவிப்பதாக பி.பி.சி நேற்றிரவு அறிவித்தது.

# தமிழர் படுகொலை 56 பேராக உயர்வு

## முஸ்லிம்ஊர்காவற்படையே காரணம்

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் நடந்த வன்முறைச் சம்பவங்களில் 56 தமிழர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கப் படுகிறது கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம்.

அரசின் கட்டுப் பாட்டின் கீழ் செயற்படும் ஊர்காவற் படைப் பிரிவும். உள்ளூர் முஸ்லிம் பொலிசாரும் தமிழ் மக்கள் மீது தாக்குதலை நடத்தியுள்ளார்கள். இப்பகுதிகளில் உள்ள தமிழ் கிராமங்களுக்கு அரசு எவ்வித பாதுகாப்பும் வழங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது-

இதுதொடர்பாக விசாரணை மேற்கொள்ள இராணுவ உயர் அதிகாரிகளும். அமைச்சர்கள் சிலரும் பொலநறுவைசென்றிருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பத்தாயிரம்

தங்காலை, மாந்தை, இராணுவ முகாமிலிருந்து தொடர்ச்சியாக ஏவப்படும் எறிகணை வீச்சுகளாலும், விமானக் குண்டு வீச்சுகளாலும் பீதியுற்ற மக்கள் 30 மைல்களுக்கு மேல் கால்நடையாக சென்று அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

மடு, உயிலங்குளம், அடம்பன், புதுக்கமம், வட்டுக்கத்தாமடு, கருங்கண்டல், பரப்பாங்கண்டல், வட்டக்கண்டல், காத்தான்குளம், ஆண்டான்குளம், வண்ணான்குளம், ஆட்காட்டிவெளி, ஆலங்குளம், தாளையடி, புதுக்குளம், முதலைகுத்தி, இலந்தைமோட்டை, உயிர்த்தராசன் கோட்டை உட்பட பலகிராம மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் போது இவர்கள்மீது குண்டுவீச்சு விமானங்களும். உலங்குவானூர்திகளும் நடாத்திய தாக்குதல்களால் பலர் காயமடைந்துள்ளனர்.

# மேதின கூட்டத்தில் அணிதிரள வேண்டுகோள்

''ஒடுக்கப்பட்ட தேச மக்களே ஒன்றுபடுங்கள்'' என்ற கோஷத்தை முன் வைத்து இவ்வருட மேதினம் அமைகின்றது. எனவே இவ் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் எமது மக்களை அணிதிரளுமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் மாவட்ட அரசியல் பிரிவு கேட்டுக் கொண்டிருக்கிறது.

மேதின ஊர்வலம்பி ப2மணிக்குமருதனா மடச் சந்தியிலிருந்து பாண்ட வாத்தியத்துடன் ஆரம்பமாகும் ஊர்வலம் காங்கேசன் வீதியூடாக நாச்சிமார் கோவிலடியை அடைந்து பின்பு இராமன் வீதியூடாக கலட்டிச் சந்தியால் பறவுண் வீதி, தொழில் நுட்பக் கல்லூரி முன்பாக உள்ள பதை வழியாகச் சென்று யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீட மைதானத்தை வந்தடையும் இதனைத் தொடர்ந்து இம் மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிவித்தலொன்றில் ஊர்வலத்தில் கலந்து கொள்ளுகின்ற தொழிற்சங்க அமைப்புகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் ரீதியாகவும், பிரிவு ரீதியாகவும் மக்கள் ஒன்று கூடும் இடங்களும், அவர்களுக்கான வாகனம், துவிச்சக்கர வண்டிகள் தங்கு மிடங்களும் தெரிவிக்கப் பட்டுள்ளன.

இதேவேளை யாழ். மாவட்டம் தழுவி இன்று நடைபெறவுள்ள மாபெரும் மேதின ஊர்வலத்தில் அனைத்துப் பகுதிகளிலுமிருந்தும் பெருந்தொகையான மக்கள் கலந்துகொள்வர் எனத் தெரிய வருவதால் இம் மக்களின் நலன் கருதி அனைத்து வாகன உரிமையாளர்களையும் தங்கள் வாகனங்களை சேவையில் ஈடுபடுத்தி உதவுமாறு மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

### வீரச்சாவு

செந்தில் (செல்லத்துரை ஈஸ்வரன். கொக்குவில் கிழக்கு), கட்டன் அறவாணன் (தவம் - வேலாயுதபிள்ளை தவக்குமார் அரசடி சாவகச்சேரி) 2 ஆம் லெப்டினன்ட் கருவண்ணன் (கனகலிங்கம்கருணதாஸ்அருச்சுணா வீதி யாழ்ப்பாணம்), வீரவேங்கை நிலன் (சுந்தரலிங்கம் சசிலிங்கம் கேணியடி ஒழுங்கை, நீர்வேலி வடக்கு) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டவர்கள் ஆவர்.

நேற்று ஆனையிறவில்இடம் பெற்ற தாக்குதலின் போது வீரச்சாவை தழுவிக்கொண்டவர் 2 ஆம் லெப்டினன்ட் இளந்தேவன் (தவபாலன்- தர்மலிங்கம் ராஜேஸ்வரன்உரும்பராய் வடக்கு) ஆவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைபபுலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### தச்சன் காடு

ணில் இருந்து ரி-56 ரக துப்பாக்கி - 01. அதற்குரியரவைக் கூடுகள் - 03, ரி - 81 ரக துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் - 03, ஏ. கே. எல். எம். ஜி. துப்பாக்கிக்குரிய ரம் மகசின் - 01, நடுத்தர ரவைகள் - 800, தொடர் ரவைகள் - 500 மற்றும் பல இராணுவ உபகரணங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன

இந்த அதிரடித் தாக்குதல் போராளிகள் தரப்பில் நான்கு வீரவேங்கைகள் வீரச்வி வைத் தழுவிக் கொண்டனர்.

# ஊர்வலங்கள், ஊர்திகள் மேதினத்திற்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

தொழிலாளர் தினமான மே தினம் இன்று தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சியூட்டும் வகையில் கொண்டாடப்பட இருக்கிறது.

வட தமிழீழப் பகுதிகளில் மாபெரும் எழுச்சிப் பேரணிகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற இருக்கிறது

யாழ். மாவட்டத்தில் அனைத்து தொழிற் சங்கங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஆகியவை ஒன்றிணைந்து நடாத்தும் மாபெரும் எழுச்சிப் பேரணிக்கும் பொதுக் கூட்டம் ஒன்றுக்கும் பெரிய அளவிலான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற இருக்கும் பொதுக் கூட்டத்தில பல்வேறு தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கிய பிரமுகர்களும் உரை நிகழ்த்துவார்கள்

இவற்றை விட வவுனியா மாவட்டம், முல்லைத்தீவு மாவட்டம், மன்னார் மாவட்டம், கிளிநொச்சி மாவட்டம் ஆகிய இடங்களிலும் மேதின எழுச்சிப் பேரணிகளும் பொதுக் கூட்டங்களும் நடாத்தப்பட இருக்கின்றது.

### புலிகள்

வங்காலை. மாந்தை இராணுவ முகாம்களிலிருந்து கடந்த செவ்வாயன்று காலை கனரக வாகனங்கள சகிதம் வெளியேறிவந்த பெருந்தொகையான இராணுவத்தினர் உயிலங்குளம் பகுதியை வந்தடைந்தனர் இப்பாரிய இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினருக்கு உதவியாக அவ்ரோ விமானங்களும், உலங்குவானூர்திகளும் கடும் குண்டுவீச்சுத்தாக்குதல்களை நடாத்திவருகின்றன.

இராணுவத்தினரின் முன்னேறும் நடவடிக்கையை விடுதலைப் புலிகள் இடைவிடாத தாக்குதல்களினால் தடுத்து நிறுத்தியுள்ளனர்

இதேவேளை செட்டிகுளத்தில் இருந்து மன்னார் வீதி வழியாக முன்னேற முயலும் இராணுவத்தினர் மீதும் விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இத் தாக்குதல்களால் இராணுவ தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளது

இதேவேளை மன்னார்-வவுனியா வீதியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ''கிறீன் பெல்ற்-3'' இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவ தரப்பில் 12பேர் காயமடைந்துள்ளதாகவும் சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### நிரந்தர நியமனத்

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கு அறிவிக்கும்படியும் கல்விச் சேவை சபையின் செயலாளர் ஏ.எஸ். வீரரத்ன பணித்துள்ளார்.

மேலும் கோட்டங்களில் நியமிக்கபபட்ட பட்டதாரி பயிலுனா ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பாடவாரியாகஉடன் அனுப்பிவைக்குமாறு மாகாண அமைச்சின் திட்டமிடல் மீளாய்வு கல்விப் பணிப்பாளர் எஸ் எஸ் மனோகரன் பிரதிக் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

### தமிழ் பாட்டாளி

மானது.

இன ஒடுக்கு முறையைத் தனது பிரதான எதிரியாகச் சந்தித்து நிற்கும் தமிழீழப் பாட்டாளி வர்க்கம் அந்தஇன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவதையே தனது முதன்மையான பணியாகக் கொள்ளவேண்டும். ஏனென்றால், இன ஒடுக்குமுறையானது தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையையே சீரழிக்க எத்தனிக்கிறது. எனவே இன ஒடுக்கு முறைக்கு எதிராகப் போராடுவது தவிர்க்கமுடியாதவரலாற்று நிர்ப்பந்தமாக எழுந்துள்ளது. இந்தப் போராட்டமானது வர்க்கப் போராட்ட வரம்புகளுக்குஅப்பால் ஒரு தேசிய பேராட்டமாக, தேசிய மக்களின் போராட்டமாக, தேசிய வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமாக உயர்வடிவம் பெறுகிறது. ஒரு தேசியவிடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே தமிழீழத் தொழிலாளர் வர்க்கம் தேசிய போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவே எமது உழைக்கும் மக்களின்விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழிகோலும்.

# சிங்கள பாட்டாளிகளுக்கு நேசக்கரம் நீட்டுகிறோம்

சிங்கள பாட்டாளி வர்க்கத்திற்கு நாம்எமது நேசக்கரத்தை நீட்டி நிற்கிறோம். சிங்கள ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்படடு, நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வரும் சிங்களப் பாட்டாளி மக்களை நாம் ஒரு நேச சக்தியாகவே கருதுகிறோம்.

தமிழ் சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதானால் தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்கவேண்டும்தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதே சமயம் தென்னிலங்கைப் பாட்டாளி வர்க்கமானதுசிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியமைப்பிற்கு முண்டு கொடுத்து நிற்கும்வரை தமிழ்-சிங்கள வர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப் போவதில்லை.

பேரினவாத சித்தாந்தப்பிடியில் இருந்து விடுதலைபெற்று விழிபபுணர்வு அடையும் பொழுதுதான் தமிழரின் சுதந்திரப்போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்களமக்கள் புரிந்துகொள்வார்கள். தமிழரின் விடுதலையில்தான் தமக்கும் விமோசனம் உண்டு என்ற உண்மையை உணர்ந்து கொள்வார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி தினமாகிய இன்று நாம் ஒரு விதி செய்துகொள்வோம்.

எந்தவித சவால்களை எதிர்கொண்டபோதும் எமதுஇலட்சியப் பயணத்தில் உறுதிதளர மாட்டோம் என ஒரு வீரசபதம் செய்வோம்.



# மரண அறிவித்தல்

## திருமதி கந்தையா மனோன்மணி

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாக கொண்டவரும். தற்போது 93/23, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் வசித்து வந்தவருமாகிய திருமதி கந்தையா மனோன்மணி 30-4-92இல் (வியாழன்) மாலை 7 மணிக்கு சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற வேலுப்பிள்ளை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. சண்முகம். கொழும்பில் வசித்து வரும் திரு. செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனலக்ஷ்மி. ஏரம்பு (ஓய்வு பெற்ற அதிபர்), இராசம்மா, ஞானம்மா (ஆசிரியை இந்துமகளிர் ஆரம்ப பாடசாலை), சந்திரசேகரம் (எழுது வினைஞர் கச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும். காலஞ் சென்ற சுப்பிரமணியம், சுந்தரமூர்த்தி, சின்னம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியை), வரராசசிங்கம் (அதிபர் கோப்பாய் நாவலர் வித்தியாசாலை), ஞானம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்வானந்தன், அருந்ததி, திருமதி அகிலேஸ்வரி பரமலிங்கம். வீரசிங்கம், வரதலக்ஷ்சுமி, திருமதி பிரேமாவதி விஷ்ணுகுமார், திருமதி அருணாதேவி குமாரதாஸ், ஸ்ரீதரன் சாந்தினி, திருமதி மதிவதனி, பிரபாகரன், பாலச்சந்திரன் (மாவீரர் அருண்) சிவானந்தன், கலாராணி, இரவீந்திரன் இரசனி, உமாசரன், புவனஇராஜேஸ்வரி, சிவகுமார், பரணிதரன், திலீபன், திருமதி கவிதா செந்தில்முருகன், கலையரசி, எழிலரசி, சாருலதா (போராளி கௌதமி) திருமதி விஜிதா அருள்பிரபாகர், சுகந்தினி, ஞானசேகரம் இவர்களின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு 02-05-92 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்

வே. க. ஏரம்பு

93/23, இந்துமகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம். [2524]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.